இலக்கு
வாராந்த மின்னிதழ்
GLOBAL TAMIL MEDIA CENTER
இதழ் 375
சனி, 24 ஜனவரி, 2026 | பக்கங்கள் 16
www.ilakku.org




# கிவுல் ஓயா திட்டம்
# ஆக்கிரமிப்புக்கான அடி

விதுரன்



## பயங்கரவாத தடைச் சட்டம் முற்றாக ஒழிக்கப்படுமா?

கிண்ணியான்



## அமெரிக்காவும் சோவியத்தின் விதியை எதிர்கொள்ளுமா?

வேல்ஸில் இருந்து அருஸ்



# இந்த நேரம் இனி வேலை செய்யாது
# உலகை அதிர வைத்த கனடா பிரதமரின் உரை

மொழியாக்கம்: ஆர்தீகன்

www.ilakku.org | info@ilakku. org | © 2026 இலக்கு இணையம்

# பிரஜா சக்திக்கு எதிரான பிரேரணை மானிப்பாய் பிரதேச சபையில் நிறைவேற்றம்!



அநுரா அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட உள்ள பிரஜா சக்திக்கு எதிரான பிரேரணையானது மானிப்பாய் பிரதேச சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. குறித்த பிரேரணையை இலங்கை தமிழரசு கட்சியின் உறுப்பினர் ரமணன் சபையில் முன்வைத்து கருத்துரைக்கையில், இந்தப் 'பிரஜா சக்தி' என்பது சட்டத்திற்கும் ஜனநாயகத்திற்கும் விரோதமானதாகும். மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் ஒவ்வொரு பிரதேசத்திலும் அபிவிருத்திகளை செய்து வருகின்ற போதிலும் அரசியல் நோக்கத்திற்காக இந்த குழுவானது கட்டமைக்கப்பட்டுள்ளது. இதனால் மக்கள் மத்தியிலும் சமூக அமைப்புகளின் மத்தியிலும் குழப்பகரமான நிலை ஏற்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைகளானது சுயாதீனமாக இயங்குகின்ற கட்டமைப்பை கொண்டுள்ள நிலையில், எச்சந்தர்ப்பத்திலும் இந்த குழுவானது இயங்க முடியாது. கிராமங்கள் தோறும் அமைக்கப்பட்டு வரும் பிரஜா சக்தி என்ற அமைப்பானது எமது சபையின் விதி மற்றும் நிர்வாக கட்டமைப்புகளிலும் எந்தவொரு சிபாரிசுகளையும் கோர முடியாது என இந்த சபையில் பிரேரணையை முன்வைக்கின்றேன் என்றார்.

இதன்போது கடுமையான வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றதுடன் பிரேரணையானது வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. இதன்போது தேசிய மக்கள் சக்தியின் ஐந்து உறுப்பினர்கள் பிரேரணைக்கு எதிராகவும், சபையில் இருந்த ஏனைய அனைத்து உறுப்பினர்களும் பிரேரணைக்கு ஆதரவாகவும் வாக்களித்த நிலையில் பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

## இலங்கையின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப சீனா உதவும்!



டித்வா புயலால் நெருக்கடிக்குள்ளாகியுள்ள இலங்கையின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்க தாம் தயாராகவுள்ளதாக இலங்கைக்கான சீனத் தூதுவர் சி சென் ஹாங் தெரிவித்துள்ளார்.

மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகா நாயக்க தேரர்களை சந்தித்து கலந்துரையாடிய போதே சீனத் தூதுவர் இதனைத் தெரிவித்தார். இதன் போது மல்வத்து பீடத்தின் மகா நாயக்க திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரருடனான சந்திப்பில் கருத்து வெளியிட்ட சீனத் தூதுவர், இலங்கை நெருக்கடிகளை எதிர்கொள்ளும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அதற்கு உதவுவது எமது கடமையாகும்.

அதற்கான காரணம் இலங்கையும் சீனாவும் மிக நெருங்கிய நண்பர்களாவர். பெருந்தெருக்கள் மற்றும் பாலங்கள் தொடர்பான விசேட நிபுணர்கள் 6 பேர் கொண்ட குழுவினர் இங்கு வருகை தந்துள்ளனர்.

அனர்த்தங்களால் சேதமடைந்துள்ள பாலங்களை துரிதமாக மீள் நிர்மாணிப்பதற்கான பணிகளுக்கான கண்காணிப்பில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். அது மாத்திரமின்றி சீன அரசாங்கம் இந்நாட்டு பாடசாலை மாணவர்களின் சீருடைகளுக்காக ஒன்றரை கோடி மீற்றர் துணியை நன்கொடையாக வழங்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

## ஊழலை நிரூபித்தால் அரசியலை விட்டு விலக தயார்

### தயாசிறிக்கு சிறிதரன் சவால்



தன் மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டுகள் அனைத்தும் அடிப்படை ஆதாரமற்றவை எனக் குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், அவற்றை நிரூபிக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவுக்கு பகிரங்க சவால் விடுத்துள்ளார்.


நேற்று முந்தினம் நாடாளுமன்ற அமர்வின் போது, நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர, சிறிதரன் மீது பாரதூரமான குற்றச்சாட்டுகளை முன்வைத்திருந்தார்.

கிளிநொச்சியில் 1,200 ஏக்கர் காணிகளை சிறிதரன் கையகப்படுத்தியுள்ளதாகவும், அவரிடமும் அவரது மகனிடமும் தலா 7 கோடி ரூபாய் வங்கி வைப்பு உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு நேற்று (23) சபையில் பதிலளித்த சிறிதரன், தயாசிறி ஜயசேகர ஒரு உண்மையான பௌத்தராக இருந்தால், இந்தப் பணம் எந்த வங்கியில், யாரால், எப்போது வைப்பிலிடப்பட்டது என்ற விபரங்களை உடனடியாகச் சமர்ப்பிக்க வேண்டும் என கோரினார்.

தொடர்ச்சி: பக்கம் 12

## ட்ரம்ப் மிரட்டல் - வர்த்தக ஒப்பந்தத்தை ஐரோப்பிய ஒன்றியம் முடக்கியது




அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், கிரீன்லாந்தை இணைப்பதற்கான அவரது திட்டம் உட்பட, ஐரோப்பிய ஒன்றியத்திற்கு எதிரான "தொடர்ச்சியான மற்றும் அதிகரித்து வரும் அச்சுறுத்தல்களை" மேற்கோள் காட்டி, ஐரோப்பிய நாடாளுமன்றம் அமெரிக்காவுடனான ஐரோப்பிய ஒன்றியத்தின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வர்த்தக மற்றும் கட்டண ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் அளிப்பதை நிறுத்தியுள்ளது.

கிரீன்லாந்து மற்றும் டென்மார்க் மற்றும் அவற்றின் ஐரோப்பிய நட்பு நாடுகளுக்கு எதிரான "தொடர்ச்சியான மற்றும் அதிகரித்து வரும் அச்சுறுத்தல்களைக் கருத்தில் கொண்டு, ஒப்பந்தத்தில் பணியை இடைநிறுத்துவதைத் தவிர வேறு வழியில்லை" "எங்கள் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு ஆபத்தில் உள்ளன," "வழக்கம் போல் வணிகம் சாத்தியமற்றது" என்று சட்டமன்றத்தின் சர்வதேச வர்த்தகக் குழுவின் தலைவரான பெர்ன்ட் லாங்கே புதன்கிழமை(21) தெரிவித்துள்ளார்.

கடந்த ஜூலை மாதம் ட்ரம்ப் மற்றும் ஐரோப்பிய ஆணையத் தலைவர் உர்சுலா வான் டெர் லேயன் ஆகியோரால் கையெழுத்திடப்பட்ட இந்த ஒப்பந்தம், அமெரிக்காவிற்குள் நுழையும் பெரும்பாலான ஐரோப்பிய ஒன்றியப் பொருட்களின் மீதான வரிகளை 15% இல் கட்டுப்படுத்துகிறது, இது பெரும்பாலான அமெரிக்க வர்த்தக பங்காளிகள் மீது விதிக்கப்பட்டதை விட குறைந்த விகிதமாகும். ஈடாக, ஐரோப்பிய ஒன்றியம் சில அமெரிக்க விவசாய மற்றும்

தொடர்ச்சி: பக்கம் 12

## காசாவுக்கான அமைதி வாரியம் சுவிஸில் அறிமுகம் - முக்கிய நாடுகள் புறக்கணிப்பு



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், சர்வதேச மோதல்களைத் தீர்ப்பதற்கான ஒரு அமைப்பான, நிரந்தர உறுப்பினர் பதவிக்கான $1 பில்லியன் விலையுடன் கூடிய தனது அமைதி வாரியத்தின் சாசனத்தை கடந்த வியாழக்கிழமை(22) அறிவித்துள்ளார்.


சுவிட்சர்லாந்தின் டாவோஸில் நடந்த கையெழுத்து விழாவில் ட்ரம்ப் தொடங்கிய இந்த வாரியம், இஸ்ரேலின் இனப்படுகொலைப் போரின் இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக காசாவை மீண்டும் கட்டியெழுப்புவதை மேற்பார்வையிட முதலில் உருவாக்கப்பட்டது.

"இந்த வாரியம் முழுமையாக உருவாக்கப்பட்டவுடன், நாங்கள் என்ன செய்ய விரும்புகிறோமோ அதைச் செய்ய முடியும்," என்று ட்ரம்ப் உலகப் பொருளாதார மன்றத்தில் கூறினார். இந்த முயற்சியை முறையாக நிறுவுவதற்கான ஆவணங்களில் கையெழுத்திடுவதற்கு முன்பு. அர்ஜென்டினா, கத்தார், அஜர்பைஜான், இந்தோனேசியா, ஹங்கேரி, மொராக்கோ, பஹ்ரைன், பாகிஸ்தான் மற்றும் சவுதி அரேபியா உள்ளிட்ட 19 நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர்கள், வெளியுறவு அமைச்சர்கள் மற்றும் பிற உயர் அதிகாரிகள் மேடையில் அவருடன் இணைந்தனர்.

அமைதி வாரியம் ஐ.நாவை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் என்று சிலர் அஞ்சுகின்றனர். விழாவில் தனது தொடக்க உரையில் ட்ரம்ப் அந்தக் கவலைகளைத்

தொடர்ச்சி: பக்கம் 12

## டென்மார்க் கிறீன்லாந்தை ஒரு காலனியாகவே நடத்தி வருகிறது - புடின்



டென்மார்க் எப்போதும் கிரீன்லாந்தை ஒரு காலனியாகவே நடத்தி வருகிறது என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பின் சுயாட்சி பெற்ற ஆர்க்டிக் தீவை வாங்கும் திட்டங்கள் குறித்து கருத்து தெரிவித்தபோது ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் கூறியுள்ளார்.

"டென்மார்க் எப்போதும் கிரீன்லாந்தை ஒரு காலனியாகவே நடத்தி வருகிறது, கொடூரமாக இல்லாவிட்டாலும் மிகவும் கடுமையா கவே நடத்தியுள்ளது," என்று புடின் புதன்கிழமை(21) கிரெம்ளினில்

தொடர்ச்சி: பக்கம் 12

## இந்த ஆண்டு இறுதிக்குள் கியூபாவில் ஆட்சி மாற்றம்?



இந்த ஆண்டு இறுதிக்குள் ஹவானாவில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த உதவுவதற்காக கியூப அரசாங்கத்தின் உள் நபர்களை அமெரிக்கா தீவிரமாகத் தேடி வருவதாக, இந்த விஷயத்தை நன்கு அறிந்த பெயரிடப்படாத அமெரிக்க அதிகாரிகளை மேற்கோள் காட்டி புதன்கிழமை(21) வால் ஸ்ட்ரீட் ஜர்னல் செய்தி வெளியிட்டுள்ளது.

வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோவை அமெரிக்கா வெளியேற்றியதன் மூலம் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப்பின் நிர்வாகம் தைரியமடைந்துள்ளதாகவும், கியூபாவை கையகப்படுத்துவதற்கான ஒரு திட்டமாக அதைக் கருதுவதாகவும் செய்தித்தாள் கூறியது.

தொடர்ச்சி: பக்கம் 10

# கிவுல் ஓயா திட்டத்தை எதிர்த்து வடமாகாண திசைகாட்டி பாராளுமன்ற உறுப்பினர்கள் போராட வேண்டும்.

பா.அரியநேத்திரன்

கிடப்பில் கிடந்த கிவுல் ஓயா திட்டம் மீண்டும் நடைமுறைப்படுத்துவது நில அபகரிப்புக்கான திட்டம் என்பதே உண்மை. இந்த அபிவிருத்தி கருத் திட்டத்தை நடைமுறைப்படுத்த கடந்த 2011 செப்டம்பர் 28ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டது.



பின்னர் பொருளாதார நெருக்கடி காரணமாக 2023 டிசம்பர் 31ஆம் திகதி இந்தத் திட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப் பட்டது. இப்போது மீண்டும் 2026 இந்த ஆண்டு இதற்காக ஏற்கனவே மதிப்பிடப்பட்ட செலவு ரூ. 23,456 மில்லியன் ஆக திருத்தம் செய்யப்பட்டுள்ளதுடன், உள்நாட்டு நிதியைப் பயன்படுத்தி 2026 தொடக்கம் 2031 ஆண்டு வரை ஐந்தாண்டிற்குள் பணிகளை முடிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இந்த திட்டமானது வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் நிலவும் குடிநீர் தட்டுப்பாடு மற்றும் விவசாயப் பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையும். என்று கூறப்பட்டாலும் அதற்கு அப்பால் இது ஒரு பாரிய நில அபகரிப்பும் சிங்கள குடியேற்றத்துக்கும் வழிவகுக்கும் என்ற உண்மையை மறுதலிக்க முடியாது.

இது வடக்கில் தமிழ் மக்களின் காணிகளை அபகரிக்கும் நோக்கிலும் குடிப் பரம்பலை திட்டமிட்ட முறையில் மாற்றியமைக்கும் நோக்கிலும் கொண்டுவரப்படுகிறது என்று இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட காலம் முதல் எதிர்ப்புகள் வெளியிடப்பட்டு வருகின்றன.

கிவுல் ஓயா திட்டம் முற்றுப்பெறும் பட்சத்தில், காட்டுப் பூவரங்குளம், வெடிவைத்தகல்லு, மருதோடை, காஞ்சிரமோட்டை, கூழாங்குளம் ஆகிய கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயத்தில் உள்ளன. குறிப்பாக, காட்டுப்பூவரங்குளத்தில் 475 ஏக்கர்களும் வெடிவைத்தகல்லில் 475 ஏக்கங்களும் வெள்ள அனர்த்த அபாயத்தில் உள்ளன.

இந்தக் கிராமங்களில் இன்னமும் தமிழ் மக்களின் மீள் குடியேற்றம் நிறைவேறாத நிலைமை நீடித்துக் கொண்டிருக்கையில் தான் இவ்வாறான வெள்ள அனர்த்த அபாய நிலைமை தோற்றம் பெற்றுள்ளது.

இக்கிராமங்களில் பூர்வீகமாக வாழ்ந்தவர்களுக்குச் சொந்தமான உறுதி காணிகள் மற்றும் வாழ்வாதார நிலங்கள் காணப்படுகின்ற போதும் அவர்களுக்கு உரிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் இன்னமும் தாமதங்கள் நீடித்துக் கொண்டிருக்கின்றன.

இவ்வாறான அபாயகரமான திட்டத்தை முற்றாக நிறுத்த வேண்டியது தமிழ்தேசிய கட்சிகளின் பொறுப்பு மட்டுமல்ல தேசிய மக்கள் சக்தி மூலமாக வடமாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் இன உணர்வுடன் இதனை எதிர்க்கவேண்டும்.

ஆளும் தரப்பு கூறுவதற்கு எல்லாம் தலையாட்டி கொண்டிருக்க வடமாகாண மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிக்கவில்லை. அபிவிருத்திக்கு அப்பால் ஆக்கிரமிப்புகளையும் தட்டிக்கேட்டவே ஆளும் தரப்புக்கு தமிழ் மக்கள் வாக்களித்தனர் என்ற உண்மையை புரிந்து அதனை தடுக்க வேண்டிய பொறுப்பு ஆளும் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் உண்டு.

தமிழ்தேசிய கட்சிகள் பொது அமைப்புகள், இதனை எதிர்த்து போராடுவதை தவிர வேறுவழியில்லை. தமிழ்த்தேசிய கட்சிகள் ஊடகங்களில் அறிக்கை விடுவதால் இதனை நிறுத்த முடியாது மக்களை அணிதிரட்டி ஒற்றுமையாக இதற்கான எதிர்ப்பை உடனே செய்ய வேண்டும்.

பொங்கல் விழாவுக்காக வடமாகாணம் சென்ற ஜனாதிபதி அநுரா அவர்கள் கிவுல் ஓயா திட்டத்தை நிறுத்தி அதற்காக ஒதுக்கிய நிதியினை மீளப்பெற்று வேறு ஒரு அபிவிருத்தி திட்டத்துக்கு அந்த நிதியினை மாற்றுவதே சிறந்த நடைமுறை. இதற்கான அழுத்தத்தை தேசிய மக்கள் சக்திமூலமாக வடமாகாணத்தில் இருந்து தெரிவான கருணானந்தன் இளங்குமாரன், சண்முகநாதன் ஸ்ரீபவானந்தராஜன், ஜெயசந்திரமூர்த்தி ரஜீவன்,செல்வராசா திலகேஷ்வரன்,மயில்வாகனம் ஜெகதீஷ்வரன், ஆகிய ஐவரும் இணைந்து அவர்களுடைய அரசுக்கும், ஜனாதிபதிக்கும் அழுத்தம் கொடுப்பார்களா?

## ஆசிரியர் தலையங்கம் | சனி, 24 ஜனவரி, 2026

# தங்கிவாழும் நிலையை உருவாக்கி மக்கள் இறைமையைத் தேசியத்தை ஒடுக்கல் தடுக்கப்படல் வேண்டும்

டாவோஸ் உலகப் பொருளாதார மாநாட்டில் அமெரிக்க அரசத் தலைவர் டொனால்ட் ட்ரம்ப் தனது இரண்டாவது பதவிக்காலத்தின் ஓராண்டை சனவரி 20இல் நிறைவு செய்த நிலையில் மறுநாள் சனவரி 21இல் ஆற்றிய உரை புதிய உலக அரசியல் முறைமையில் அமெரிக்கா தனது பழைய ஒரு முனைவாக்கத்தன்மையை மீள்கட்டமைப்பதற்குச் செய்யும் கடும் முயற்சியினை உலகு தெளிவாகக் கண்டு கொண்டது. இது குறித்து யோன் கிரேஸ் (John Crace) பிரித்தானியாவின் த கார்டியன் ஆங்கில நாளிதழில் 22.01. 26 இல் Along comes Trump and our emperors have no clothes என்ற ஆங்கிலத்தலைப்பில் ஆராய்கையில் அடுத்து என்ன சொல்வது அல்லது செய்வது என்பது குறித்து வெட்கப்படாத நிலையும் ஆனால் தாங்களே எல்லாவற்றையும் செய்தோம் என உரிமை கோரும் போக்கும் தெளிவாக இருந்தது என அழகாக விளக்கியிருந்தார். மற்றொரு ஆய்வாளர் டேவிட் சிமித் வாசிங்டனில் இருந்து ட்ரம்ப் தன்னை வெள்ளையரின் நம்பிக்கையாக தனது இனவாதத்தில் தோய்ந்த டாவோஸ் உரையில் வெளிப்படுத்தினார் (Trump paint himself as great white hope in racism – drenched Davos Speech) தலைப்பில் செய்த ஆய்வில் அரசத்தலைவரின் சோமாலிய வசைப்பொழிவையும் அவருடைய குடிவரவு கொள்கை வகுப்பாளரான ஸ்ரீபன் மில்லர்சின் அதிதீவிர வலதுசாரி கருத்துக்களை ஊக்கப்படுத்தும் வகையில் ஐரோப்பியத் தலைமைகளைக் கேவலமாகப் பேசியதையும் உபதலைப்பாக அமைத்து ஆய்வு செய்திருந்தார்.

அத்துடன் டேவிட் சிமித் "டொனால்ட் ட்ரம்ப் பீரங்கிக் குழாய் போன்றே தனது உரையை நிகழ்த்தினார் எனக் கூறிவிட்டு பிரான்சின் அரசத்தலைவர் இம்மனுவல் மக்ரோன் அணிந்திருந்த 'ஏவியேற்றர் சண் கிளாஸ்' Aviator Sun Glass) ஐ கேலி செய்தார். கனடா அமெரிக்காவாலேயே வாழ்கிறதென கனடாவின் பிரதமர் மார்க் கானியை வசை பாடினார். சுவிஸ் தங்களாலேயே நல்ல நாடாக இருப்பதாகத் தன்னைத் தானே புகழ்ந்து கொண்டார். டென்மார்க் ஆறுமணித்தியாலத்துள் கிறீன்லாந்தை இழக்க விருந்த நேரத்தில் தாங்களே தோண்டி நிமிர்த்தி விட்டதாக வியந்து கொண்டார். ஆனால் எல்லாவற்றையும் உடைக்கும் தனது சொல்லாட்சிக்கலைக்கு மத்தியில் தான் ஐரோப்பாவை ஒன்றுபடுத்தவே முயல்வதாகப் பிரகடனம் செய்தார். இதுவே அவருடைய இருண்ட நயவஞ்சகமான தீய நோக்குடைய திட்டமாக உள்ளது" எனத் தனது கருத்தையும் பதிவிட்டிருந்தார்.

அமெரிக்க முன்னாள் அரசத்தலைவர்களில் ஒருவரான தியடோர் ரூஸ்வேல்ட் தனது வெளிவிவகாரக் கொள்கை குறித்து ரஸ்ய -யப்பான் போர் நேரத்தில் விளக்குகையில் " நான் மென்மையாகப் பேசுவேன் ஆனால் கையில் தடியொன்றை வைத்திருப்பேன்" எனக்கூறிச் செயற்பட்டு 1906ம் ஆண்டில் அமைதிக்கான நோபல் பரிசையும் தனதாக்கிக் கொண்டார். இதனை மீள்நினைவுறுத்திய ஆய்வாளர் அடம் கப்பட் " வெறித்தனமாகப் பேசுவதும் கையில் தடியினை வைத்திருப்பதுமே ட்ரம்பின் வெளிவிவகாரக் கொள்கை என்ற ஆய்வினை வெயிட்டுள்ளார். அமெரிக்கா தனது வெளிவிவகாரக் கொள்கையை மீளுருவாக்குவதில் பாதிவழியில் நிற்கிறது. ஆனால் இதில் வென்றால் என்ன தோற்றால் என்ள அமெரிக்காவில் ஆதரவை ஏற்படுத்தாது எனப் 'பொரின் அவையர்ஸின் ஆய்வாளர்கள் சாள்ஸ் குப்புச்சன் பீட்டர் ரூபெளட்டிஸ் அந்த வெளிவிவகார ஆய்விதழில் தெளிவாக விளக்கியுள்ளார்.

இந்நிலையில் ட்ரம்ப் தன்னை எட்டு போர்க்களங்களில் அமைதியை ஏற்படுத்தியவராக அதில் இந்திய பாகிஸ்தான் கடந்த ஆண்டு போரும் அடங்குமென கூறுகின்றார் என்பதை எடுத்து நோக்கின் இவர் வெளியுலகத்தில் தன்னைச் சாதனையாளராக காட்டி அமெரிக்காவில் உள்நாட்டில் ஆதரவைபை பெற முயற்சிக்கின்றார் என்பதும் தெளிவாகிறது.

இதில் அவர் அமெரிக்காவை உலகின் நகரகாவலராகவே பிரடனப்படுத்தியமையை உலகில் கடந்த சில மாதங்களில் நடைபெற்ற அமெரிக்காவின் அனைத்துலக சட்டங்களைத் தூரவீசிய வரலாறுகள் எடுத்துரைக்கின்றன. இவ்வாரத்தில் உலக சுகாதார நிறுவனத்துக்குத் தான் கடந்த ஆண்டு கொடுத்த விலகல் அறிவிப்பை நடைமுறைப்படுத்தி அமெரிக்கா விலகியுள்ளது. பில்கேட் அவர்களே உலக சுகாரதார நிறுவனம் முக்கியமானது என்கிற கருத்தை வெளியிட்டுள்ளார். உலகில் பெருந்தொற்றுக்கள் ஏற்பட்டால் அமெரிக்கா உட்பட முழு உலகுமே பலத்த அழிவுகளைச் சந்திக்கும் என்பது யதார்த்தமான உண்மை. காலநிலைச் சமநிலையைப் பாதுகாக்கும் முயற்சியிலும் இருந்து அமெரிக்கா விலகிவிட்டது. இவை எல்லாம் அமெரிக்கா தன்னை உலகில் இருந்து தனிமையாக்கிக் கொள்வதினைத் தெளிவாக்குகின்றது.

இத்தகைய சூழலில் கனடியப் பிரதமரின் டாவோஸ் உரை மத்திய சக்தியுடை நாடுகள் இணைந்து செயற்படு வதன் மூலமே உலகைக் காப்பாற்ற முடியும் என்பது மிக முக்கிய அழைப்பாக உள்ளது.

அமெரிக்க அரசத்தலைவரின் 2வது வருகை உலக அரசியலில் தங்கிவாழ்தலை உருவாக்கி மக்கள் இறைமையை ஒடுக்கும் அரசியல் தந்திரோபாயத்தை கடந்த ஆண்டு முழுவதும் தனது நிறைவேற்று அதிகாரமுள்ள அமெரிக்க அரச அதிபர் பதவி மூலம் வெளிப்படுத்தி உலகின் புதிய அரசியல் ஒழுங்கில் அமெரிக்காவின் பழைய ஓர் முனை முனைவாக்கத் தலைமையை வரிவிதிப்புப் போர்முறை மூலமும் தன்னியக்க ஆயுதபாதுகாவல் தாக்கியழித்தல் போர்முறை மூலமும் மீளநிறுவ எடுக்கும் முயற்சிகளை நியாயப்படுத்த உலகின் சட்ட ஒழுங்குமுறைகளைத்தானே மீறி வந்தார். இத்தகைய போக்கும் ஒருகாலனித்துவ ஆட்சி முறைமை என்பதையே கனடாவின் பிரதமரின் உரையும் அதை மாற்ற முயலும் அவரின் அழைப்பும் எடுத்து விளக்குகிறது.


மேலும் தற்போது ஐக்கியநாடுகள் சபைக்கு சமாந்தரமான அமெரிக்கா சார்பான உலக சபையினை நிறுவும் உடன்படிக்கையையும் அவர் எதிர்பார்த்த 35 நாடுகளில் 20 மட்டுமே கலந்து கொண்ட நிலையில் பிரான்ஸ், பிரித்தானியா, நோர்வே, சுவிடன் போன்ற ஐரோப்பாவின் முக்கிய நாடுகளே கலந்து கொள்ளாத நிவையில் 22.01.2026 இல் டாவோசில் கையெழுத்திட்டுள்ளார். இதன் வழி தன்னை டீல்மேக்கர் அரசியல் தலைமை எனத் தானே புகழவும் செய்துள்ளார். இவரின் ஐக்கிய நாடுகள் சபைக்குச் சமாந்தரமான தனக்குச் சார்பான உலகச் சபையை அமைத்தல் என்ற உள்நோக்கின் முதல் வெளிப்பாடாகக் காசாவின் அமைதியை நிறுவும் 60 நாடுகளின் இந்தக்கட்டமைப்பை வெளிப்படுத்தியுள்ளார். இதில் பங்கேற்க அழைக்கப்பட்டுள்ள 60 நாடுகளும் வைப்பு நிதியாக ஒரு பில்லியன் அமெரிக்க டொலரை வைப்பு செய்தல் என்னும் முன்நிபந்தனையானது இதுவரை இஸ்ரேல் தன்னுடன் வரலாற்றுத் தொடர்புள்ள பலஸ்தீனிய தேசஇனத்துடன் இணக்க அரசியலுக்குச் சிந்திக்காததின் விளைவாக இஸ்ரேலின் இறைமை பெயரளவிலேயே இருக்க அனைத்துலக நாடுகள் அறுபதுடன் இஸ்ரேலின் இறைமை பகிர்வாகி கூட்டாண்மை பங்காண்மை கொண்ட உலகின் நிலப்பரப்பாக காசா நீள்கரை மாறுவதை இனி இஸ்ரேலினால் கூடத் தடுக்க இயலாது என்பதே உண்மை.

மக்களின் அரசியல் எதிர்காலத்தினைத் தீர்மானிக்க அவர்களில் இருந்து என்றுமே பிரிக்க இயலாத அவர்களின் சுயாட்சி உரிமை என்னும் மக்கள் உரிமையைச் செயற்படாது செய்வதன் மூலமே அவர்களின் இந்த மண் எங்களின் சொந்த மண் என்கின்ற மக்கள்இறைமையுணர்வை அவர்கள் செயற்படுத்துவதற்கு அடிப்படைத் தளமாக உள்ள தாயக தேசிய தன்னாட்சியுடன் கூடிய அவர்களின் தேச ஒருமைப்பாட்டை உடைக்கும் தந்திரோபாயம் உனக்கு நான் பெரியன செய்கின்றேன் என்று ஒருவரின் நில உரிமையை அதில் அவர் விரும்பியவாறு உழைக்கும் உரிமையைக் கட்டுப்படுத்துகின்ற பொழுது இயல்பாகவே அந்த தேசமக்கள் அதனைச் செய்பவருக்கு அடிமையாவதை தமது விருப்பின் பெயரில் ஏற்பதற்கான சமுக பொருளாதார அரசியல் ஆன்மிக அழுத்தங்கள் அந்த மக்கள் இனத்தின் மேல் வலுக்கட்டாயமாகத் திணிக்கப்படுகையில் அதனையே அம்மக்கள் தமது சமகால வாழ்வுக்கான நம்பிக்கையாக வழியாக ஏற்கும் அளவுக்குத் திட்டமிட்ட முறையில் வல்லாண்மைகள் பிராந்திய மேலாண்மைகள் முதலாளித்துவ மேலாண்மைகள் நேரடியாக அனைத்துலக சட்டங்களை செயலற்றதாக்கி உலகின் எந்த மூலையிலும் நிலைப்படுத்த தமது தொழில்நுட்ப தமது படைபல வலிமையால் பலத்தால் தீர்மானங்களுக்கு கட்டுப்படுதல் நிதி மதி முகாமைத்துவங்கள் மக்கள் நல சேவைப்பணிகள் மருத்துவப் போக்குவரத்துச் சந்தை தேவைகள் எல்லாமே வல்லாண்மைகளின் கூட்டாண்மைக்குள் அடக்கப்பட்டு விடும். இதுவே இன்றைய உலகின் பொருளாதார அரசியல் முறைமையாக உள்ளது.

இந்த இன்றைய ட்ரம்பின் அரசியல் தந்திரோபாயங்கள் எல்லாவற்றையும் மகிந்த ஆட்சியாளர்கள் ஈழத்தமிழர்கள் மேல் பயன்படுத்தியே உலகின் பாதுகாப்பின்மைக்கு வித்திட்டனர் என்பது இவ்விடத்தில் நினைவு கூரப்பட வேண்டியது முக்கியம். ஏனெனில் அநுர அரசும் இதே பாணியில் சென்று ஈழத்தமிழரைத் தங்களில் தங்கிவாழும் நிலையை உருவாக்கி ஈழத்தமிழர்களின் தேசிய நீக்கத்தையும் இறைமை நீக்கத்தையும் செய்து வருகின்றார்கள் என்பதை இலக்கு நினைவுறுத்தி இவ்வாறு ஈழத்தமிழர்கள் சிங்கள அரசில் தங்கிவாழும் நிலையை மாற்ற ஈழத்தமிழரின் வறுமை மற்றும் அறியாமையை நீக்கும் ஈழத்தமிழர் அமைதிக்கான சபையை நிறுவ முயற்சிக்க வேண்டுமென்பதே இலக்கின் இவ்வார எண்ணமாக உள்ளது.

**ஆசிரியர்**

# கிவுல் ஓயா திட்டம்
# ஆக்கிரமிப்புக்கான அடி




**விதுரன்**

வவுனியா வடக்கு மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் எல்லைப் பகுதிகளில் நீண்டகாலமாகத் தொடரும் நில ஆக்கிரமிப்பு விவகாரம், தற்போது 'கிவுல் ஓயா' நீர்ப்பாசனத் திட்டத்தின் ஊடாகப் புதியதொரு அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளது.

கடந்தவாரம் முழுவதும் பாராளுமன்றத்தில் தமிழ் மக்கள் பிரதிநிதிகளான வைத்தியர் சத்தியலிங்கம், துரைராசா ரவிகரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் இத்திட்டத்தின் ஆபத்து குறித்துத் தொடர்ச்சியாகக் குரல் எழுப்பி வந்தனர்.

குறிப்பாக, வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் டாக்டர் சத்தியலிங்கம் முன்வைத்த வாதங்களும், களத்தில் ரவிகரன் முன்னெடுத்த போராட்டங்களும், பாராளுமன்றத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உள்ளிட்டோர் வழங்கிய கடும் அழுத்தங்களும் அரசாங்கத்தைச் சற்றுத் திரும்பிப் பார்க்க வைத்திருக்கின்றன.



இந்த அழுத்தங்களின் விளைவாகவே, பாராளுமன்ற வளாகத்தில் அமைச்சர் லால் காந்த தலைமையில் ரவிகரன் மற்றும் சத்தியலிங்கம் ஆகியோரை உள்ளடக்கிய விசேட சந்திப்பு ஒன்று நடைபெற்றது. ஆனால் அச்சந்திப்பு கூட முறையாக அழைப்பு விடுக்கப்பட்டு நடத்தப்பட்டதொன்றாக இல்லை.

தொடர்ச்சியாக வெளிப்படுத்தப்பட்டு வரும் அழுத்தங்களை சமாளிப்பதற்காகவும் அங்கு களத்தில் பணியாற்றும் உபாலி சமரசிங்கவுக்கு காணப்படும் நெருக்கடிகளை சாமாளிப்பதற்காகவும் வன்னி மாவட்டத்தை கையாளும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க, தனது தோழர் லால்காந்தவை அழைத்து சந்திப்பை நடத்தியுள்ளார் என்பது ஒரு சூட் சுமமான நகர்வாகும் என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

இச்சந்திப்பின்போது, குறித்த திட்டம் சம்பந்தமாக தொடர்புடைய சகல தரப்பினருடனும் பெப்ரவரியில் கலந்துரையாடுவதாகவும் பிற மாவட்டங்களில் இருந்து குடியேற்றங்கள் செய்யப்படாது என்றும் அமைச்சர் லால் காந்தவால் உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

ஆனால், 2011 ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் மிகுந்த இரகசியமாகப் பேணப்பட்டு வரும் இந்தத் திட்டமானது, வவுனியா மாவட்ட மக்களின் ஒப்புதலின்றி திணிக்கப்படுகிறது. அதற்கு எதிர்ப்புக்கள் வெளியிடப்பட்டு வந்த நிலையில் தற்போது தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது 23,456 மில்லியன் ரூபா மதிப்பீட்டிலான இத்திட்டத்திற்குத் அமைச்சரவை அங்கீகாரத்தை வழங்கியுள்ளமை பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட் டங்களின் நீர்த்தேவையை நிவர்த்தி செய்வதாக மேலோட் டமாகக் கூறப்பட்டாலும், இதன் உண்மையான நோக்கம் 1983 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட சிங்களக் குடியேற்றப் பகுதியான மகாவலி - எல் வலயத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதே ஆகும்.

சுமார் 480,000 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்ட மகாவலி - எல் வலயம், ஆரம்பத்திலிருந்தே திட்டமிட்ட தமிழினப் பூர்வீகப் பகுதிகளில் இனப்பரம்பல் மாற்றத்திற்காகவே பயன் படுத்தப்பட்டு வருகிறது.

1964 முதல் 1968 வரையிலான காலப்பகுதியில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி ஆணையம் மற்றும் உணவு விவசாய நிறுவனம் இணைந்து மகாவலி நீரை வட மத்திய கால்வாய் ஊடாக இப்பகுதிக்குக் கொண்டு வரத் திட்டமிட்டன.

ஆனால், புவியியல் ரீதியாக அது சாத்தியமற்றது எனத் தெரிந்தும், குடியேற்றங்களை மட்டும் முன்னெடுத்த ஆட்சியாளர்கள், தற்போது வவுனியா வடக்கின் மழைநீரைச் சேமித்து அதேகுடியேற்றவாசிகளுக்கு வழங்க முற்படுவதே இந்த 'கிவுல் ஓயா' திட்டமாகும்.

இத்திட்டத்தின் தொழில்நுட்பக் கட்டமைப்பு மற்றும் புள்ளிவிபரங்களை ஆராயும்போது, இது உள்ளூர் தமிழ் மக்களுக்கு எவ்விதப் பலனையும் தராது என்பது தெளிவாகிறது.



வவுனியா வடக்கின் அடர்ந்த காடுகள் மற்றும் சிற்றருவிகளில் இருந்து பாயும் நீரைத் தேக்க 4.41 கிலோமீட்டர் நீளமான அணைக்கட்டு கட்டப்படவுள்ளது. இதன் மூலம் 64 மில்லியன் கனமீட்டர், அதாவது 51,904 ஏக்கர் அடி நீர் சேகரிக்கப்படும்.

இந்த நீர்த்தேக்கத்திற்காக வவுனியா வடக்கு பிரதேசச் செயலகப் பிரிவுக்கு உட்பட்ட 3,900 ஏக்கர் நிலப்பரப்பு நீரேந்துப் பகுதியாக மாற்றப்பட்டு மூழ்கடிக்கப்படும். இந்தத் திட்டத்தினால் பயன்பெறப்போகும் 6,000 விவசாயக் குடும்பங்களில், ஏற்கனவே உள்ள 4,372 விவசாயிகள் மற்றும் 1,628 புதிய குடியேற்றவாசிகள் உள்ளடங்கப்போகின்றனர்.

இதில் அதிர்ச்சியளிக்கும் விடயம் என்னவெனில், 1,700 ஹெக்டெயர் (4,100 ஏக்கர்) புதிய காடுகள் அழிக்கப்பட்டு புதிய குடியேற்றங்கள் உருவாக்கப்படும் எனத் திட்ட முன்மொழிவில் நேரடியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

13கிலோமீற்றர் நீளமான கால்வாய் ஊடாக இந்த நீர் கொண்டு செல்லப்படும்போது, பாதிக்கப்படும் வவுனியா வடக்கு மக்களுக்குப் போதிய நட்டஈடோ அல்லது அவர்களின் விவசாய நிலங்களுக்கான நீர் உத்தரவாதமோ வழங்கப்படவில்லை என்பது பாரிய சமூக அநீதியாகும்.

சுற்றுச்சூழல் ரீதியாகப் பார்த்தால், இத்திட்டம் ஒரு பெரும் பேரழிவை நோக்கிச் செல்கிறது. இலங்கையில் வேறு எங்கும் காணப்படாத அரிய வகை தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் இத்திட்டத்தினால் அழியும் எனச்சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கை எச்சரிக்கிறது. ஆனாலும் அந்த அறிக்கை திட்டத்துக்கு அனுமதி அளித்திருக்கின்றமை வேடிக்கையானது.

2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் 13,000ஏக்கர் நிலம் வனவளத் திணைக்களத்தால் மகாவலி அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் பார்க்கின்றபோது வெடிவைத்த கல்லு மற்றும் பட்டிக்குடியிருப்பு கிராமங்களுக்குச் சொந்தமான தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களும் உள்ளடக்கப்பட்டே வழங்கப்பட்டுள்ளன.

இங்குள்ள திரிவச்சகுளம் போன்ற நீர்நிலைகள் மூன்று சந்ததிகளாகத் தமிழ் மக்களால் பயன்படுத்தப்பட்டவை. 1983 கலவரங்களினால் இடம்பெயர்ந்த மக்கள் மீளத் திரும்பித் தமது நிலங்களைத் துப்புரவு செய்த போது, அவர்கள் வனவளத் திணைக்களத்தால் கைது செய்யப்பட்டு 5 ஆண்டுகள் நீதிமன்ற அலைக்கழிப்புக்கு உள்ளாக்கப்பட்டனர்.

ஆனால், அதேகாலப்பகுதியில் மகாவலி அதிகார சபையின் ஆதரவுடன் 25க்கும் மேற்பட்ட பெரும்பான்மையினக் குடும்பங்கள் அதேநிலத்தில் 'அந்தரவெள கமக்காரர் அமைப்பு' என்ற பெயரில் விவசாயம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

200 ஏக்கருக்கும் அதிகமான காடுகள் பாரிய இயந்திரங்களைக் கொண்டு அழிக்கப்பட்டபோது மௌனம் காத்த அரச இயந்திரங்கள், தமிழ் மக்களின் வாழ்வுரிமையை மட்டும் நசுக்குவது ஏன் என்ற கேள்வி எழுகிறது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தனது தேர்தல் அறிக்கையில் 'இனப்பரம்பலை மாற்றும் செயற்பாடுகள் நிறுத்தப்படும்' என்று வாக்குறுதி அளித்திருந்தது. ஆனால், தற்போதைய அமைச்சரவை முடிவுகள் அந்த வாக்குறுதிக்கு நேரெதிரானதாகவே காணப்படுகின்றது,

வவுனியா மாவட்டத்தில் வயற்காணியற்ற ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் இருக்கும்போது, 13,000 ஏக்கர் நிலத்தை ஒரு குறிப்பிட்ட குடியேற்ற வலயத்திற்காக மட்டும் பயன்படுத்துவது சமத்துவம் பேசும் ஆட்சியாளர்களின் சமத்துவமற்ற பொருளாதாரக் கொள்கையின் வெளிப்பாடாகும்.

இனவாதமும், ஊழலும் இல்லாத நாட்டை உருவாக்குவதாகக் கூறும் புதிய அரசாங்கம், கடந்த கால அரசுகளின் அதேமேலாதிக்கச் சிந்தனையுடன் இத்திட்டத்தைச் செயல்படுத்த முனைவது அதன் உண்மையான முகத்தை வெளிப்படுத்தி நிற்கிறது.

தமிழ் மக்களின் நில உரிமைகளையும், சுற்றாடல் சமநிலையையும் கருத்தில் கொள்ளாத இத்தகைய திட்டங்கள் நாட்டின் நீண்டகால அமைதிக்குச் சவாலாகவே

தொடர்ச்சி: பக்கம் 10

# பிரஜா சக்தியா..? தேசிய மக்கள் சக்தியா..? யாருக்கான திட்டம்.?



— பா.அரியநேத்திரன்

இலங்கையில் ஆட்சி செய்யும் சிங்கள தலைவர்கள் காலத்துக்குக் காலம் ஒவ்வொரு புதிய பெயர்களில் அபிவிருத்தி திட்டங்கள், சமூக கட்டமைப்பு திட்டங்களை அறிமுகப்படுத்துவதும் அதை கைவிடுவதும் வழமை அந்த வகையில் 2024, நவம்பரில் ஆட்சி அமைத்த தேசிய மக்கள் சக்தி அரசு கடந்த 2025, ஜூன் 30 ல் "பிரஜா சக்தி" என்ற பெயரில் தற்போது ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

ஏற்கனவே 1978, ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்தன 'கம்உதாவ', 'மகாபொல' என்ற பெயர்களுடனும், 1990 ல் ஜனாதிபதி பிரமதாச 'ஜனசக்தி'என்ற பெயருடனும், 1994 ல் ஜனாதிபதி சந்திரிகா 'சமூர்த்தி'என்ற பெயருடனும், 2009, ஜனாதிபதி மகிந்த 'ஹரித லங்கா' 'வடக்கின் வசந்தம்', 'கிழக்கின் உதயம்'.'மகிந்த சிந்தனை' என்ற பெயர்களுடனும் 2015, நல்லாட்சியில் ஜனாதிபதி மைத்திரி 'கம்பறலிய'என்ற பெயருடனும்

2023 ல் ஜனாதிபதி ரணில் 'அஸ்வெசும'என்ற பெயருடனும் 2024, தற்போது ஜனாதிபதி அநுர 'கிளீன் சிறிலங்கா', 'பிரஜா சக்தி' என்ற பெயர்களுடனும் அபிவிருத் திகளுக்காக நிதிகள் ஒதுக்கி அவர்களுடைய அரசியல் பணியை முன்னெடுப்பதே இலங்கை நாட்டின் வரலாறாகும்.

பிரஜா சக்தி" என்பது மக்கள் சக்தி என பொருள் படும் இதே பெயரை கடந்த 1990, ல் ஜனாதிபதி பிரமதாச "ஜனசக்தி" என்ற பெயரில் ஆரம்பித்தார் ஜனம் என்பதும் பிரஜா என்பதும் தமிழில் மக்களை (சமூகத்தை) குறிக்கும் "பிரஜா" என்பது சமஷ்கிருத சொல்லாகும்.

தேசிய மக்கள் சக்தியின் நோக்கம் சமூகத்தை வலுவூட்டுவதற்கும், சமூகத்திற்குள் பொருளாதார நன்மை கள் சமமாக விநியோகிக்கப்படுவதை உறுதி செய்வதற் கும் தற்போதைய அரசாங்கத்தின் முதன்மைத் திட்டமாக செயல்படுத்தப்படும் தேசிய வேலைத்திட்டமாக "பிரஜா சக்தி" அமையும் என அரசாங்கம் குறிப்பிட்டாலும் இவ்வாறான பணிகளை உள்ளூராட்சி மன்றங்கள் மூலம், அல்லது சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூல மாக செயல்படுத்தாமல் ஏன் தனியாக இதனை அரசின் செல்வாக்கில் தமது கட்சி ஆதரவாளர்களை நியமித்து முன் எடுக்கப்படவேண்டும் என்ற விமர்சனங்களும்,கருத்துகளும் எதிர்கட்சிகள் முன்வைப்பதை காணமுடிகிறது.




இதையிட்டு ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் கபில ஜனக பண்டார தலைமையில் கடந்த வருடம் 2025 ஜூன் 30 ல் ஜனாதிபதி அலுவலகத்தில் செயல மர்வு ஒன்றை ஏற்பாடு செய்து அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தின் படி சமூகத்தை வலுவூட்டுவதற்கான பன்முக அணுகு முறையுடன் கூடிய வேலைத்திட்டமாக "பிரஜாசக்தி" தேசிய வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும் என கூறியதுடன் அதனை ஜனாதிபதி ஆரம்பித்து வைப்பார் என கூறிய நிலையில் அந்த திட்டமானது கடந்த 2024 ஜூலை 04 ல் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவால் வைபவ ரீதியாக ஆரம்பிக்கப்பட்டது.



தற்போது, இந்நாட்டின் மொத்த சனத்தொகையில் ஒவ்வொரு 06 பேரில் ஒருவர், பல பரிமாண வறுமையால் பாதிக்கப்பட்டுள்ளதோடு, இவர்களில் 95.3% பேர் கிராமப் புறங்களிலும் தோட்டப் பகுதிகளிலும் வாழ்கின்றனர். இந்த நிலை தொடர்வது, நாட்டின் பொருளாதாரம் மற்றும் உற்பத்திச் செயல்முறையை பாதிப்பதோடு, சமூக வலுவூட்டல் மற்றும் பாதிக்கப்படக்கூடிய குழுக்களை மாத்திரம் தேர்ந்தெடுத்து, முறையான சமூகப் பாதுகாப்புத் திட்டத்திற்குப் பரிந்துரைக்கப்படுவது இதன் கீழ் செயற்படுத் தப்படுகிறது.

பல்வேறு அரசாங்கங்களின் கீழ் இந்நாட்டில் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்ட வறுமை ஒழிப்புத் திட்டங்கள் வறுமையை ஒழிப்பதை மாத்திரம் இலக்காகக் கொண்ட வேலைத்திட்டங்களாக உள்ளதோடு, அதற்கு பதிலாக, சமூக வலுவூட்டல் ஒருங்கிணைந்த அணுகுமுறையின் ஊடாக "பிரஜாசக்தி" திட்டத்தை நடை முறைப் படுத்துவது இதன் சிறப்பம்சமாகும். எனவும், இலங்கையில் வறுமையை ஒழிப்பதில் அதி கூடிய பங்களிப்பைச் செய்த கல்வித்துறை, வறுமை ஒழிப்புக்கான அணுகுமுறையாக இது வரை முறைப்படி அங்கீகரிக்கப்படாததால், இத்தகைய மூலோபாயங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து இந்த ஒருங்கிணைந்த அணுகுமுறை உருவாக்கப்பட உள்ளதாகவும். வறுமையில் தாக்கம் செலுத்தும் சுகாதாரம், போக்குவரத்து, உணவு பாதுகாப்பு மற்றும் சந்தைப்படுத்தல் போன்ற துறைகளில் அதிக கவனம் செலுத்தப்படும் எனவும் அரச தரப்பு செய்தி கள் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தப் புதிய அணுகுமுறையின் மூலம் சமூக வலுவூட்டல் பொறிமுறையை நடைமுறைப்படுத்த மூன்று புதிய கட்டமைப்பு மாற்றங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. தேசிய மட்டத்தில், ஜனாதிபதியின் தலைமையில் "பிரஜா சக்தி" தேசிய கொள்கைப் பேரவை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது டன், 09 அமைச்சர்கள் அதன் உறுப்பினர்களாக உள்ளனர்.

புதிய கட்டமைப்பு மாற்றங்களின் ஊடாக இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதே தேசிய கொள்கைப் பேரவையின் நோக்கமாகும். கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சர் உபாலி பன்னிலகே இதன் தலைவராகச் செயற்படுகிறார்.

கொள்கை சபையின் முடிவுகளை செயல்படுத்த அமைச்சரின் தலைமையில் ஒரு பிரஜாசக்தி தேசிய வழிகாட்டுதல் குழு நிறுவப்பட்டுள்ளது. அதில் 9 அமைச்சின் செயலாளர்கள் மற்றும் மாகாண சபை பிரதம செயலாளர்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.

ஜனாதிபதியின் சிரேஸ்ட செயலாளர் (அபிவிருத்தி நிர்வாகம்) குழுவின் செயலாளராகவும், அமைப்பாளராகவும் செயல்படுகிறார். பிராந்திய ஒருங்கிணைப்புக் குழுக்கள், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கள், அமைச்சுக்கள் மற்றும் மாகாண சபைகள் ஊடாக தேசிய மட்டம் வரை இந்த தேசிய திட்டத்தை ஒருங்கிணைக்க கிராம அலுவலர் பிரிவு மட்டத்தில்ஒரு அபிவிருத்திச்சபை நிறுவப்படும். இந்தக் குழுவின் தலைவர் பிராந்திய அபிவிருத்திக் குழு வின் தலைவரால் நியமிக்கப்படுவார், மேலும் பிரதேச செயலகத் தில் இணைக்கப்பட்ட ஒரு அதிகாரி செயலாளராக நியமிக் கப்படுவர்.

சமூக வலுவூட்டல் பணிக்கு உதவும் அபிவிருத்தி முடிவுகளை எடுக்கவும் குறிப்பாக சமூகப் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டிய மக்களை அடையாளம் காண இந்த சபை நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. இதற்காக, நிபுணர்கள், தொழில் முனைவோர், வர்த்தகர்கள், தொழிலதிபர்கள், அரச ஊழியர்கள் உட்பட அனைத்துப் பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு குழு நியமிக்கப்படும்.

இந்த செயலமர்வில் உரையாற்றிய ஜனாதிபதி யின் சிரேஸ்ட மேலதிக செயலாளர் கபில ஜனக பண்டார, தற்போதைய அரசாங்கம் அதன் கொள்கை அறிக்கையின்படி "வளமான நாடு – அழகான வாழ்க்கையை" உருவாக்குவதற்கு மூன்று முக்கிய திட்டங்களை முன்மொழிந்துள்ளதாக சுட்டிக் காட்டினார்.

டிஜிட்டல் பொருளாதாரம் உள்ளிட்ட பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களின் ஊடாக குறுகிய கால பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் பெறப்படும் நன்மைகளை நாட்டின் அனைத்து மக்களுக்கும் நியாயமாக விநியோகித்து அதன் மூலம் சமூகத்தை வலுப்படுத்தும் நோக்கில் "பிரஜாசக்தி" திட்டம் செயல்படுத்தப்படுகிறது என்ற விளக்கத்தை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தெளிவுபடுத்தியுள்ளது.

ஆனால் "பிரஜா சக்தி அரசியல் சார்ந்ததல்ல, கட்சி சார்ந்ததல்ல" என்று அதிகாரபூர்வமாக தெரிவிக்கப்பட்டாலும், நடைமுறையில் ஒரே கட்சி சார்ந்த நபர்களின் மேலாதிக் கம், மாற்றுக் கருத்துடையோர் விலக்கப்படுதல், அரசியல் பிரச்சார மொழி பயன்படுத்தப்படுதல் போன்ற விமர்சனங் கள் வலுப்பெற்று வருகின்றன.

அரசியல்சார்பற்றதன்மை என்பது அறிவிப்புகளால் நிரூபிக்கப்படுவதல்ல; அது நடைமுறையால் மட்டுமே நிரூபிக்கப்பட வேண்டும். சில இடங்களில், குறிப்பிட்ட அரசியல் கட்சி சார்ந்தவரே தலைவராக இருக்க வேண்டும் என்ற மறைமுக நிபந்தனைகள் விதிக்கப்படுவதாகக் கூறப்படுவது, இந்த செயத்திட்டத்தின் சுயாதீனத்தையே கேள்விக்குள்ளாக்குகிறது.

எனவே, பிரஜா சக்தி செயத்திட்டம் உண்மையில் மக்களுக்கானதாக இருக்க வேண்டுமெனில், அது அதன் சுற்றுநிருபங்களுக்கு ஏற்ப, அரசியல் நடுநிலையுடன், பொது நிதி பொறுப்புடன் செயல்படுவது தவிர வேறு வழியில்லை. இல்லையெனில், ஒரு மக்கள் வலுப்படுத்தல் திட்டம் அரசியல் கருவியாக மாறும் அபாயம் தவிர்க்க முடியாததாகும். அரசத் திட்டங்கள் அதிகாரத்தின் வெளிப் பாடு அல்ல; அவை சட்டத்தின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள பொதுப் பொறுப்புகளாகும் என்பதை உணர்ந்து இந்த திட்டம் முன்நகர்த்தப்படுமா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

• • •

# பயங்கரவாத தடைச் சட்டம் முற்றாக ஒழிக்கப்படுமா?



கின்னியான்

இலங்கையில் மாறி மாறி வருகின்ற அரசாங்கங்கள், சட்டங்களை மாற்றுவதும் அதனை புதிய வடிவில் கொண்டுவருதல் என்பதும் தொடர்ச்சியாக நடந்தேறி வருகிறது.

சில சட்டங்கள் சிறுபான்மை சமூகத்தை இலக்கு வைத்து உருவாக்கப்படுகிறதா என்பதும் சந்தேகிக்கப்படுகிறது.



தற்போது பேசு பொருளாகி உள்ள பயங்கரவாத தடை சட்டத்தை ஒழிக்க வேண்டும் என வடகிழக்கில் பல போராட்டங்களும் கையெழுத்துகள் நடாத்தப்பட்டாலும் அதற்கு பதிலாக மீள் சட்டமொன்றை உருவாக்க அரசாங்கம் தயாராகி வருகின்றது.

இப்புதிய சட்டமே மாநிலப் பாதுகாப்புச் சட்டம் (PSTA) – ஆகும். 1979 ஆம் ஆண்டு முதல் குறுகிய காலத்திற்குள் உருவாக்கப்பட்டிருந்த பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை (Prevention of Terrorism Act – PTA) என்பதனை நீக்குவதாக அறிவித்து, அதற்குப் பதிலாக மாநிலப் பாதுகாப்புச் சட்டம் (Protection of the State from Terrorism Act – PSTA) என்ற புதிய சட்ட வரைவை முன்வைத்துள்ளது. அரசு இதனை “சட்ட சீர்திருத்தம்” எனக் குறிப்பிட்டாலும், உண்மையில் இது ஒரு பெயர் மாற்றத்துடன் கூடிய பழைய சட்டத்தின் மறுவடிவம் என்றே பலரின் கருத்தாக உள்ளது.

பயங்கரவாத தடை சட்டம் - கடந்த பல தசாப்தங்களாக குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் “மனித உரிமை மீறல்கள், தன்னிச்சையான கைது, நீண்டகால தடுப்பு, சித்திரவதை, நீதிமன்ற மேற்பார்வை இல்லாத தடுப்புகள்” போன்ற குற்றச்சாட்டுகளுக்கு காரணமாக இருந்து வந்தது. அந்தச் சட்டம் சர்வதேச சமூகத்தின், மனித உரிமை அமைப்புகளின் மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்புகளின் கடும் விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு PTA-வை நீக்குவதாக அரசாங்கம் அறிவித்தாலும், பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய சட்ட வரைவு அதே அடக்குமுறை அம்சங்களை உள்ளடக்கியதாகவே தெரிகிறது.

அரசின் விளக்கத்தின் படி, PSTA ஒரு “நவீன சட்டம்”, “சர்வதேச தரநிலைகளுக்கு ஏற்ப அமைக்கப்பட்ட சட்டம்”, “தேசிய பாதுகாப்பை உறுதி செய்யும் சட்டம்” என வர்ணிக்கப்படுகிறது. ஆனால், இந்தச் சட்ட வரைவை ஆய்வு செய்தால், அதில் பல அம்சங்கள் பயங்கரவாதம் என்ற சொல்லுக்கான வரையறையை மிக விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் அரசாங்கம் விரும்பும் எந்த செயற்பாட்டையும் “பயங்கரவாதம்” எனக் குற்றம் சுமத்தக் கூடிய நிலை உருவாகிறது.

இந்தச் சட்டத்தின் கீழ், வன்முறை அல்லாத அரசியல் செயற்பாடுகள் கூட, “அரசைக் கட்டாயப்படுத்தும் நோக்கமாக உள்ளது” எனக் கருதப்பட்டால், பயங்கரவாதமாக வகைப்படுத்தப்படலாம். இதன் மூலம் போராட்டங்கள், எதிர்ப்புகள், சமூக ஊடக கருத்துக்கள், ஊடக செய்தி வெளியீடுகள், அரசை விமர்சிக்கும் பேச்சுகள் ஆகியவை கூட குற்றமாக மாற்றப்படக்கூடிய சூழல் உருவாகிறது. இது ஜனநாயக உரிமைகளின் அடிப்படைத் தளத்தை சீர்குலைக்கும் ஆபத்தை ஏற்படுத்துகிறது.

மேலும், PSTA சட்டத்தின் கீழ் வழங்கப்படும் கைது மற்றும் தடுப்பு அதிகாரங்கள், PTA-வில் இருந்ததை விட குறிப்பிடத்தக்க வகையில் குறைக்கப்படவில்லை.

பயங்கரவாத தடை சட்டம் என்ற பேரில் பல அப்பாவி இளைஞர்களும் அரசியல் கைதிகளும் சிறைவாசத்தை அனுபவிக்கின்றனர்.




இவ்வாறான நிலை குறித்து திருகோணமலையை சேர்ந்த சமூக செயற்பாட்டாளர் திருமதி வாணி தெரிவிக்கையில், நாட்டில் தமிழர்கள் மீது மட்டும் பாயும் பயங்கரவாத தடை சட்டம் காணப்படுவதனையே நாங்கள் அறிகிறோம். பல பொய்யான காரணங்களை வைத்து சிறிய சிறிய தவறுகளுக்காக இச் சட்டத்தை வைத்து கைது செய்கிறார்கள். பயங்கரவாத தடை சட்டம் போன்றே மாற்றம் பெறும் சட்டம் ஒன்று உருவாக்கவுள்ளதாக தெரியவருகிறது. எங்கள் உரிமைகளை கூட நடைமுறைப்படுத்த முடியாத அளவுக்கு வாழ்கிறோம். மாவீரர் தின நிகழ்வுகளை நடத்துகின்ற போதும் பயங்கரவாத தடை சட்டம் ஊடாக பல தமிழ் பேசும் மக்களை கைது செய்த வரலாறுகளும் உண்டு. எனவே எப்படியான சட்டங்கள் வந்தாலும் இது பயங்கரமான சட்டம் என்பதில் எந்த மாற்றமும் இல்லை. இதனை தமிழ் மக்களுக்கு பாதிப்பு இல்லாத வகையில் அரசாங்கம் மாற்றுவதாக இருந்தால் முறையான விடயத்தை கையாள வேண்டும்” என்றார்.

தற்போது காணப்படும் சட்டம் போலவே மாற்றம் பெறவுள்ள சட்டமும் காணப்படுவதாக சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். வடகிழக்கு தமிழர் தாயகத்தை பொறுத்தமட்டில் தீவிரவாத அச்சுறுத்தல், ஆயுதக் குழுக்களின் நடமாட்டம்,பயங்கரவாத தாக்குதல் போன்றன இல்லை. இதனால் இச் சட்டம் தேவை தானா என்பது பற்றியும் சந்தேகிக்கின்றனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் கூற்றுப்படி பயங்கரவாதம் என வகைக்குள் வகைப்படுத்துவதாக இருந்தால் உயிருக்கு ஆபத்தான அல்லது கடும் வன்முறைச் செயல், மக்களிடையே தீவிர பயத்தை உருவாக்கும் நோக்கம், அரசை அல்லது சர்வதேச அமைப்புக்களை கட்டாயப்படுத்தும் அரசியல் நோக்கம் போன்றன உள்ளடக்கப்பட வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

ஆனால் ஈழ நாட்டில் அவ்வாறில்லை. பலஸ்தீன நாட்டின் கொடி பொறித்த ஸ்டிக்கரை ஒட்டிய முஸ்லீம் இளைஞர் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார். இவ்வாறாக சிறிய பல விடயங்களை

தொடர்ச்சி: பக்கம் 12



# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமும் அநுரவின் நடைப்பயணமும்

**அனைத்துலக உயிரோடை தமிழ் வானொலி மற்றும் இலக்கு மின்னிதழ் நேயர்களுக்கு வணக்கம். இன்றைய 'தாயக களம்" நிகழ்ச்சியில் அரசியல் ஆய்வாளர் ஜோதிலிங்கம் அவர்கள் கலந்து கொண்டு சமகால அரசியல் நிலவரங்கள் குறித்து கருத்துபகிர்கிறார்.**

**கேள்வி :**

**புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் அடிப்படை நோக்கம் என்ன?**

**பதில் :**

பொதுவாக சட்டங்கள் மக்களுக்காக உருவாக்கப்படுகின்றன என்று கூறப்படுகிறது. ஆனால் நடைமுறையில் பலசட்டங்கள் அரசின் அதிகாரத்தை பாதுகாக்கும் நோக்கில் உருவாக்கப்படுகின்றன. புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமும் அந்த வகையிலேயே அரசை பாதுகாக்கும் சட்டமாகத் தோன்றுகிறது.

1979ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டம் தமிழர்களின் அரசியல் போராட்டத்தைஅடக்குவதற்காக உருவாக்கப்பட்டது. அந்தச் சட்டம் பல தசாப்தங்கள் நடைமுறையில் இருந்து தமிழ் மக்களைகடுமையாக பாதித்தது. ஆயுதப் போராட்டம் அடக்கப்பட்டாலும், தமிழர்களின் அரசியல் பிரச்சினை தீரவில்லை. அந்தஅரசியல் பிரச்சினை மீண்டும் எழுச்சி பெறக்கூடும் என்ற அச்சமே புதிய சட்டத்தின் அடிப்படை காரணமாக உள்ளது.




**கேள்வி :**

**இந்தச் சட்டத்தின் பிரதான இலக்கு யார்?**

**பதில் :**

முஇந்த சட்டத்தின் பிரதான இலக்கு தமிழ் மக்களும், அவர்களின் அரசியல் செயற்பாடுகளுமே என்று கூறலாம். தமிழர்களின் அரசியல் உரிமைப் போராட்டத்தை கட்டுப்படுத்துவதற்காகவே இந்த சட்டம் உருவாக்கப்படுகின்றது.

அரசு வெளிப்படையாக இதை ஒப்புக்கொள்ளவில்லை என்றாலும், சட்டத்தின் உள்ளடக்கம் தமிழர்களின் அரசியல்செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது.

மேலும், ஐரோப்பிய ஒன்றியத்தின் GSP+ சலுகையைத் தொடரப் பெறுவதற்காக பழைய பயங்கர வாத தடைச்சட்டத்தை நீக்க வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டது. அந்த நிபந்தனையை பூர்த்தி செய்ததாக காட்டுவதற்காகவே புதிய சட்டம் கொண்டு வரப்படுகிறது.

**கேள்வி :**

**இந்த சட்டத்தில் உள்ள ஆபத்தான அம்சங்கள் என்ன?**

**பதில் :**

இந்த சட்டத்தில் “பயங்கரவாதம்” என்ற சொல்லுக்கு மிக விரிவான விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. தடைசெய்யப்பட்ட இயக்கங்களின் அரசியல் நோக்கங்களை ஆதரிக்கும் கருத்துக்களை வெளியிட்டால்கூட அதுபயங்கரவாதமாகக் கருதப்படக்கூடிய சூழல் உருவாகிறது.

ஒரு அரசியல் கருத்தை வெளிப்படுத்துவது கூட குற்றமாக மாறக்கூடிய நிலை ஏற்படுகிறது. போராட்டம் நடத்தினாலும்பயங்கரவாதமாக வரையறுக்க முடியும்.

மேலும், காணிகளை தடை செய்யப்பட்ட பகுதிகளாக அறிவிக்கும் அதிகாரம் அரசுக்கு வழங்கப்பட்டுள்ளது. விசாரணை அதிகாரம் போலீசுக்கு மட்டுமின்றி ராணுவத்துக்கும் வழங்கப்பட்டுள்ளது. விசாரணை இல்லாமல் இரண்டுமாதங்கள் வரை கைது செய்து வைத்திருக்க முடியும்.

இந்த அம்சங்கள் அனைத்தும் இந்த சட்டம் பழைய பயங்கரவாத தடைச் சட்டத்தை விடவும் கடுமையானதாகமாறக்கூடும் என்பதைக் காட்டுகின்றன.

**கேள்வி :**

**இந்த சட்டம் ஏன் அரசியல் ரீதியாக முக்கியமானது?**

**பதில் :**

**உயிரோடைத்தமிழ்வானொலிக்கு ஜோதிலிங்கம் அவர்கள் அளித்த செவ்வியின் முக்கிய பகுதிகளை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம். இந்த நேர்காணலை YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan) செய்யவும்.**



இந்த சட்டம் அரசியல் ரீதியாக மிகவும் முக்கியமானது. ஏனெனில் இது அரசின் அதிகாரத்தை மேலும் வலுப்படுத்தும்ஒரு கருவியாக மாறும்.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மை உள்ள அரசுக்கு இந்த சட்டத்தை நிறைவேற்றுவது சாத்தியமானதாக உள்ளது. ஆனால் தமிழ் மக்களின் சம்மதம் இல்லாமல் சட்டம் கொண்டு வரப்படுமானால், அது அரசியல் ரீதியாக பெரும்நெருக்கடியை உருவாக்கும்.

தமிழ் அரசியல் கட்சிகள் ஒருங்கிணைந்து எதிர்ப்பு தெரிவித்தால், அரசுக்கு அரசியல் அழுத்தம் ஏற்படும். அதேநேரத்தில் மக்கள் மத்தியில் உருவாகும் அரசியல் எழுச்சி அரசுக்கு பெரும் சவாலாக மாறும்.

**கேள்வி :**

**தமிழர்கள் எவ்வாறு இந்த சட்டத்தை எதிர்க்க முடியும்?**

**பதில் :**

தமிழர்கள் பல்வேறு அரசியல், சமூக மற்றும் சர்வதேச களங்களில் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். அரசு அதிகமாக அச்சப்படுவது உலகளாவிய அரசியல் போராட்டத்தையே. முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வுகள், மாணவர் போராட்டங்கள் போன்றவை சர்வதேச கவனத்தை ஈர்த்தன.

அதேபோல், தமிழ் மக்களின் அரசியல் போராட்டம் சர்வதேச அளவில் வலுப்பெற்றால், அது அரசுக்கு பெரும்அழுத்தத்தை ஏற்படுத்தும்.

பாராளுமன்ற அரசியல், மக்கள் இயக்கம், சர்வதேச ஆதரவு ஆகிய மூன்றையும் ஒருங்கிணைத்தால்தான் இந்த சட்டத்திற்கு எதிரான உண்மையான போராட்டம் உருவாகும்.

**கேள்வி :**

**ஜனாதிபதி வடமாகாணத்தில் சுதந்திரமாக நடைபயணம் செய்தது என்ன அர்த்தம்?**

**பதில் :**

ஜனாதிபதி எந்தவித பெரிய பாதுகாப்பும் இல்லாமல் வடமாகாணத்தில் நடைபயணம் செய்தது முக்கியமான அரசியல்செய்தியாக மாறியது.

ஒரு நாட்டின் தலைவன் எந்தவித அச்சுறுத்தலும் இல்லாமல் வடக்கில் சுதந்திரமாக நடக்க முடிந்தால், அரசை பாதுகாக்கும் பெயரில் கடுமையான பயங்கரவாத சட்டம் ஏன் தேவை என்ற கேள்வி எழுகிறது.

இது தமிழ் இளைஞர்கள் மத்தியில் உருவான நியாயமான சந்தேகம். பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லாத சூழலில்கடுமையான சட்டம் தேவைப்படுமா என்ற கேள்வி அரசின் நோக்கத்தை வெளிப்படுத்துகிறது.

**கேள்வி :**

**வடக்கு-கிழக்கு மக்களை அரசாங்கம் ஈர்க்க முயற்சிப்பது பற்றி உங்கள் கருத்து?**

**பதில் :**

அரசாங்கம் வடக்கு-கிழக்கு மக்களை தங்கள் பக்கம் ஈர்க்க மிகவும் திட்டமிட்ட முறையில் செயல்படுகிறது. சமூகநிகழ்வுகள், அரசியல் நடவடிக்கைகள், வளர்ச்சி திட்டங்கள் போன்றவற்றின் மூலம் மக்கள் ஆதரவைப் பெறமுயற்சிக்கிறது.

அதே நேரத்தில் தமிழ் தேசிய கட்சிகள் மீது மக்கள் மத்தியில் அதிருப்தி உருவாகியுள்ளது. ஒருங்கிணைந்த அரசியல்இல்லாமை, கொள்கை தெளிவின்மை, மக்கள் பிரச்சினைகளில் போதிய கவனம் இல்லாமை போன்ற காரணங்களால்சிலர் புதிய அரசியல் இயக்கங்களை நோக்கி நகர்கின்றனர். இது தமிழ் அரசியலின் மிகப்பெரிய சவாலாகும்..

**கேள்வி :**

**கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தமிழ்நாடு சென்றது அரசியல் ரீதியாக எவ்வளவு முக்கியம்?**

**பதில் :**

தமிழ்நாடு மற்றும் இந்திய அரசியல் தொடர்புகளை வலுப்படுத்துவது இலங்கைத் தமிழர் அரசியலுக்கு மிகவும்முக்கியமானது.

இந்தியாவின் நிலைப்பாடு இல்லாமல் இலங்கை அரசியல் மாற்றங்களை ஏற்படுத்த முடியாது. தமிழ்நாட்டின் ஆதரவுஇல்லாமல் இலங்கைத் தமிழர் பிரச்சினையை சர்வதேச அளவில் முன்னெடுக்க முடியாது.

அந்த வகையில் இந்தப் பயணம் வரவேற்கத்தக்கது. ஆனால் வெளிநாட்டு ஆதரவை மட்டுமே நம்புவது போதாது. தாயகத்தில் மக்களை ஒருங்கிணைக்கும் அரசியல் இயக்கம் உருவாக வேண்டும்.

தாயகத்தில் அரசியல் எழுச்சி இல்லாமல் வெளிநாட்டு முயற்சிகள் மட்டும் பெரிய மாற்றத்தை உருவாக்க முடியாது.



**கேள்வி :**

**தமிழ் அரசியலின் எதிர்கால பாதை என்ன?**

**பதில் :**

தமிழ் அரசியல் தற்போது ஒரு முக்கிய திருப்புமுனையில் உள்ளது. ஒருங்கிணைந்த அரசியல் இல்லாமல், மக்கள்ஆதரவு இல்லாமல் எந்த அரசியல் இயக்கமும் வெற்றி பெற முடியாது.

தமிழ் தேசிய கட்சிகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். மக்கள் பிரச்சினைகளை மையமாக வைத்து அரசியல்செயல்பட வேண்டும். அதே நேரத்தில் சர்வதேச அரசியல், இந்திய அரசியல், மக்கள் இயக்கம் ஆகிய மூன்றையும் இணைத்த ஒரு அரசியல்பாதை உருவாக்கப்பட வேண்டும். அப்படியானால்தான் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் பாதுகாக்கப்பட முடியும்.

தொடர்ச்சி: பக்கம் 15

வாராந்த மின்னிதழ் | இதழ் 375 | மலையகம்
சனி, 24 ஜனவரி, 2026 | பக்கம் 08

# புது வடிவத்துடன் காணி உரிமை போராட்டம்



இலங்கைத்தீவின் பொருளாதாரத்தில் முதுகெலும்பாக விளங்கும் மலையகத் தமிழ் சமூகம், இந்த நாட்டிற்கு அழைத்து வரப்பட்டு இரண்டு நூற்றாண்டுகளைக் கடந்து விட்ட நிலையிலும், தமக்கான அடிப்படை உரிமைகளுக்காக இன்றும் வீதியில் நின்று போராட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை தொடர்கிறது. அண்மையில் கொழும்பு கொள்ளுப் பிட்டி லிபர்டி சுற்றுவட்டத்தில் நடைபெற்ற "உரிமைக்கான பொங்கல்" நிகழ்வும், அதனைத் தொடர்ந்து தமிழ் முற் போக்கு கூட்டணி பிரான்ஸ் தூதுவரிடம் முன்வைத்த கோரிக்கைகளும், மலையக மக்களின் காணி உரிமைப் போராட்டத்தை புதியதொரு பரிமாணத்திற்கு இட்டுச் சென்றுள்ளன. அந்த வகையில் தைப்பொங்கல் என்பது தமிழர்களின் தை திருநாள் மட்டுமல்ல, அது நிலத்திற்கும் உழைப்பிற்கும் செலுத்தும் நன்றிக்கடனாகும்.



ஆனால், உழைப்பதற்கென்று ஒரு நிலம் இருந்தும், மலையக பெருந்தோட்ட மக்களுக்கு வாழ்வதற்கென்று சொந்தமாக ஒரு துண்டு காணி இல்லாத நிலையில், மலையக சிவில் சமூகக் கூட்டிணைவு "உரிமைக்கான பொங்கல்" என்ற பெயரில் ஒரு கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தது.

கொழும்பு லிபர்டி சுற்றுவட்டத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வு வெறும் சடங்கு ரீதியான பொங்கல் அல்ல. மாறாக, இலங்கை அரசாங்கத்திற்கும், சர்வதேசத்திற்கும் விடுக்கப்பட்ட ஒரு செய்தியாகும். "எம்மை இன்னும் தோட்டத் தொழிலாளர்களாக மட்டும் பார்க்காதீர்கள், எம்மையும் இந்த நாட்டின் காணி உரிமையுள்ள, கௌரவமான பிரஜைகளாக அங்கீகரியுங்கள்" என்பதே அந்தச் செய்தியின் சாராம்சம்.

மலையகத்தில் தமிழர்கள் செறிந்து வாழும்




பகுதிகளில் இன்னும் 'லயன்' முறைமை தொடர்வதும், அவர்கள் ஒரு கூலித் தொழிலாளியாகவே அடையாளப்படுத்தப்படுவதும் ஜனநாயக இலங்கைக்கு ஒரு பெரும் கறை என்பதை இந்த நிகழ்வு உரக்கச் சொன்னது. குறிப்பாக மாதாந்த சம்பள முறைமைக்குள் உள்வாங்கப்படாமல் இன்னமும் நாட்கூலிகளாகவே அந்த மக்கள் வைக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம், சிவில் சமூக அமைப்புகள் ஒருபுறம்



வீதியில் இறங்கிப் போராடும் வேளையில், மறுபுறம் அரசியல் ரீதியாக சர்வதேசத்தின் கதவுகள் தட்டப்படுகின்றன. தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தலைமையிலான குழுவினர் பிரான்ஸ் தூதுவர் ரெமி லம்பேர்ட்டை கொழும்பில் உள்ள அவரின் உத்தியோகப்பூர்வ வாசஸ்தலத்தில் சந்தித்து மிகவும் முக்கியமான கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

இதில் பிரதானமானது, ஐரோப்பிய ஒன்றியத்தின் GSP+ வரிச்சலுகையை இலங்கையின் மலையக மக்களின் நில மற்றும் வீடமைப்பு உரிமைகளுடன் இணைக்க வேண்டும் என்பதாகும். இது ஒரு தந்திரோபாயமான நகர்வாக பார்க்கப்படுவதுடன் அதனை பல துறைசார் நிபுணர்களும் வரவேற்றுள்ளனர்.

இலங்கை அரசாங்கம் சர்வதேச ரீதியாகப் பொருளாதார நன்மைகளைப் பெறும்போது, நாட்டின் ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்கு எதிராக நிலவும் பாகுபாடுகளைக் களைவதற்கு இந்த வரிச்சலுகைகளை ஒரு அழுத்தமாகப் பயன்படுத்துவது காலத்தின் கட்டாயமாகும் என்று மனோ கணேசன் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் மலையக மக்களின் நில உரிமைப் போராட்டத்தின் தற்போதைய மையப்புள்ளியாக 'டிட்வா' பேரழிவு காணப்படுகிறது. அந்த அடிப்படையில் இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடமைப்புத் திட்டங்களை அரசாங்கம் முன்னெடுக்கும்போது, மலையகத் தோட்டங்கள் திட்டமிட்டுப் புறக்கணிக்கப்படுவதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளமையை மனோ கணேசன் உள்ளிட்ட தரப்பினர் எடுத்துரைத்துள்ளனர்.

அத்துடன் வீட மைப்புக்காக அரசாங்கம் அறிவித்த 5 மில்லியன் ரூபாய் நிதியுதவி மற்றும் 7 பேர்ச் காணி போன்றன ஏனைய பகுதிகளில் வழங்கப்பட்டாலும், தோட்டப்புறங்களில் அவை நடைமுறைப்படுத்தப்படாமை பெரும் பாரபட்சமாகும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மனோ கணேசன் சுட்டிக்காட்டியது போல, இது வெறும் 'தவறு' அல்ல, மாறாக 'கட்டமைப்பு ரீதியான பாகுபாடாகும்'.

அதாவது, ஒரு சமூகம் தனது முன்னேற்றத்தைத் தானே தீர்மானிக்க முடியாத வகையில், அவர்களைக் காணி

மருதன் ராம்

உரிமையற்றவர்களாகவே வைத்திருக்க வேண்டும் என்ற ஒடுக்குமுறை எண்ணம் அதிகார வர்க்கத்தினரிடம் இன்னும் இருப்பதையே இது காட்டுகிறது. மலையக மக்களைப் பொறுத்தவரை காணி உரிமை என்பது வெறும் ஒரு நிலத்துண்டு மட்டுமல்ல.

அது அவர்களின் பொருளாதார சுதந்திரமாகும். சொந்த நிலம் இருந்தால் மட்டுமே அவர்கள் தோட்டத் தொழிலுக்கு அப்பால் விவசாயத்திலோ அல்லது சுயதொழி லிலோ ஈடுபட முடியும். ஒரு நிரந்தர முகவரி மற்றும் நில உரிமை இருக்கும்போதுதான் அவர்கள் உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் இதர அரச கட்டமைப்புகளில் முழுமையான அங்கீகாரம் பெற முடியும். அப்படியாயின் அந்த மக்களின் சகல தனிமனித உரிமைகளும் மீறப்படுகின்றன. அதேநேரம் லயன் அறைகளில் பல தலைமுறைகளாக வாழ்வது அவர்களின் சுகாதாரத்தையும், தனிமனித கௌரவத்தையும் பாதிக்கிறது. தனித்தனி வீடுகள் மற்றும் அதற்கான காணி உரிமை என்பன அவர்களின் வாழ்வாதாரத் தரத்தை உயர்த்தும்.

## புதிய அரசாங்கமும் மலையகத்தின் எதிர்பார்ப்பும்

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான புதிய அரசாங்கம், 'மாற்றம்' மற்றும் 'நீதி' குறித்துப் பேசி வருகின்றது. ஆனால், மலையகத் தலைவர்களும் சிவில் சமூகமும் விடுத்த சந்திப்புக்கான கோரிக்கைகள் இன்னும் ஏற்கப்படவில்லை என்பது கவலைக்குரியது. மலையக மக்களின் பிரச்சினைகளை வெறும் தொழிலாளர் பிரச்சினையாகப் பார்க்காமல், அது ஒரு தேசிய இனப்பிரச்சினையாகவும், மனித உரிமைப் பிரச்சினையாகவும் அணுகப்பட வேண்டும்.




"உரிமைக்கான பொங்கல்" என்பது அந்தச் சமூகம் தங்களின் பூர்வீக நிலத்திற்கான தாகத்தை வெளிப் படுத்திய ஒரு சமிக்ஞையாகும். சர்வதேச சமூகம், குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியம் போன்ற அமைப்புகளும், இலங்கைக்கான வர்த்தகச் சலுகைகளை வழங்கும்போது, இத்தகைய மக்களின் அடிப்படை உரிமைகள் மதிக்கப் படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்த வேண்டும். மலையகத் தமிழ் மக்கள் இந்நாட்டின் இரண்டாம் தரப் பிரஜைகள் அல்ல.

தொடர்ச்சி: பக்கம் 12

# மில்லர், கயலின் தொடர்ச்சி

## முத்துக்குமார்

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய வள்ளலாரைப் போலவே, சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டு தன்னுயிரை அர்ப்பணித்த முத்துக்குமாரும், அரிதினும் அரிதான மானுடன். உணர்ச்சி வசப்பட்டோ, அவசரப்பட்டோ அப்படியொரு முடிவை முத்துக்குமார் எடுத்துவிடவில்லை - என்பதில்தான். அந்த வீரத் தமிழ் மகனின் தனித்துவம் ஒளிர்கிறது.



உயிர் துறப்பதற்கு முந்தைய 48 மணி நேரத்தில் முத்துக்குமாரால் எழுதப்பட்ட மரண சாசனம், இறப்பை நோக்கி நகரும் தருவாயிலும், ஆழ்ந்து அறிந்த அரசியல் ஆய்வுத் திறனுடன். பொறுமையுடனும், பொறுப்புடனும் வரலாற்றைப் பதிவு செய்கிறது. எந்த இடத்திலும், வரம்பு களை மீறிவிடவில்லை. அதுதான் அந்த சாசனத்தின் சிறப்பம்சம்.

'ஜாலியன் வாலாபாக்கில் வெள்ளையன் கொன்று குவித்தான் என்றார்களே! இவர்கள் முல்லைத்தீவிலும், வன்னியிலும் செய்வதென்ன? அங்கு கொல்லப்படும் குழந் தைகளைப் பாருங்கள்; உங்கள் குழந்தைகள் நினை வுக்கு வரவில்லையா? கற்பழிக்கப்படும் பெண்களைப் பாருங்கள்... உங்களுக்கு அதுபோன்ற வயதில் ஒரு தங்கையோ, அக்காவோ இல்லையா?.

முத்துக்குமாரின் மேற்கண்ட வாசகங்கள், எதிரிகளின் இதயத்தைக் கூட அடித்துத் தகர்க்கக் கூடியவை.

'சீனாவின் டாங்கிகள், இந்தியாவின் உளவு விமானங்கள். பாகிஸ்தானின் ஆர்டிலரிகள் மட்டுமல்ல... இப்போது எம் மக்களைக் கொலை செய்து வருவது சர்வதேச சமூகத்தின் மௌனமும்தான் என்பதை எப்போது உணர்வீர்கள்' என்கிற முத்துக்குமாரின் கேள்வி, பல உலக நாடுகளின் முகத்திரையைக் கிழிக்கிறது. இப்போது கூட, இனப்படுகொலைக்கான நீதி தாமதமாவதற்கு சர்வதேச சமூகத்தின் மௌனம்தான் காரணமாயிருக்கிறது என்பதே யதார்த்தம்.

உணர்ச்சியும் அறிவும் ஒரே வேகத்தில் பயணிக்க முடியாது. ஒன்றை ஒன்று மிஞ்சப் பார்க்கும். இந்தப் பொதுவான நடைமுறைக்கு நேர்மாறானதாக இருந்தன முத்துக்குமாரின் வார்த்தைகள். அந்த இளைஞனால் அறிவோடு எழுதவும் முடிந்தது. உணர்ச்சியோடு இயங்கவும் முடிந்தது. அதுதான் முத்துக்குமார்.



தமிழின அழிப்புக்கு முடிவு கட்ட வேண்டுமென்றும், ராஜீவ் காந்தி படுகொலைக்கு பக்கச் சார்பற்ற நியாயமான விசாரணை நடத்தப்பட வேண்டுமென்றும், சிங்களப் பத்திரிகையாளர் லசந்த கொலை தொடர்பாக நீதி விசாரணை தேவையென்றும் கோரியதன் மூலம், பல்வேறு எல்லைகளைத் தொட முடிந்தது, முத்துக்குமாரால்! இந்த பரந்து விரிந்த பார்வைதான். ஒட்டுமொத்தத் தமிழினத்தையும் ஈர்த்தது.

எல்லாவற்றுக்கும் மேலாக. ஒரு ஆகப்பெரிய அர்ப்பணிப்புக்கு எந்தப் பதற்றமும் இல்லாமல் முத்துக்குமார் ஆயத்தமானது நம்மை வியக்க வைக்கிறது. தன்னுடைய மரண சாசனத்தை எழுதி முடித்த நிலையிலும், மிக மிக இயல்பாகவே இருந்திருக்கிறார் அவர்.

சென்னை கொளத்தூரில், தங்கை தமிழரசியின் வீட்டில் தங்கியிருந்த முத்துக்குமார். அங்கிருந்து சுமார் 8 மைல் தொலைவிலுள்ள தேவநேயப் பாவாணர் நூலகத்துக்கு நடந்தே போய் விடுபவர். அப்படியொரு அறிவுத் தேடல் அந்த இளைஞனுக்கு! ஜனவரி 28-ம் தேதி இரவு, உணவு பரிமாறுகிற தங்கையிடம். மறுநாள் காலையிலேயேதான் வெளியே போக வேண்டியிருப்பதால், காலை உணவு வேண்டாமென்று கூறி விடுகிறார். வழக்கம் போல அண்ணனுக்கு வெளியே ஏதாவது வேலையிருக்கக் கூடும் என்று நினைத்து விடுகிறாள் அந்தத் தங்கை. அதுதான் தன் அண்ணனுக்குத் தான் கொடுக்கிற கடைசி உணவு என்று. தமிழரசிக்கு அப்போது தெரியாது.

அதற்கு முந்தைய 48 மணி நேரத்தில், மரண சாசனத்தை எழுதி விடுகிறார். தீக்குளிப்பதற்கு முன் விநியோகிப்பதற்காக அதன் நகல்களை எடுத்து மறைத்து வைத்திருக்கிறார். தங்கைக்கு எந்த ஐயமும் ஏற்பட்டு விடாதபடி இயல்பாகப் பேசுகிறார். இயல்பாக உண்கிறார்.

இவை ஒருபுறமிருக்க. தீக்குளிப்பதற்குப் பயன்படுத்தப் போகிற மண்ணெண்ணையை, எவர் கண்ணிலும் பட்டுவிடாதபடி, வாங்கி மறைத்து வைத்திருக்கிறார்.

உடலில் மண்ணெண்ணையை ஊற்ற முயலும் போது. பாதி மேலேயும் பாதி கீழேயுமாக சிந்தி வீணாகி விடக்கூடாது என்கிற எச்சரிக்கை உணர்வுடன், அந்த மண்ணெண்ணை கேன்-ல் கூடுதலாக ஒரு ஓட்டை போட்டு வைத்திருக்கிறார்.



இவ்வளவும் செய்த முத்துக்குமார். சென்னை சாஸ்திரிபவன்வளாகத்தில்.தான்தீக்குளிக்கத்தேர்ந்தெடுத்த இடத்தை, முன்கூட்டியே. ஒருமுறைக்கு இருமுறை பார்வையிட்டிருப்பார் என்பதில் சந்தேகமேயில்லை. நிலை குலையாத ஒரு போராளி அப்படித்தான் இருப்பான்.

காலையில், அந்த வளாகத்தில், மத்திய அரசு ஊழியர்கள் மற்றும் பொதுமக்களின் நடமாட்டம் இருக்கும். எதிரேயுள்ள பேருந்து நிறுத்தத்தில். அருகாகை பெண்கள் கல்லூரி மாணவிகள் மற்றும் சங்கர நேத்ராலயா (கண் மருத்துவமனை) செல்வோரின் நடமாட்டம் இருக்கும். சாஸ்திரி பவனை ஒட்டியுள்ள நடைபாதைத் தேநீர்க் கடைகளில். வாடிக்கையாளர்கள் இருப்பார்கள். அத்தனைப் பேருக்கும் தன் மரண சாசன நகலைக் கொடுத்துவிட்டு, கண்ணிமைக்கும்நேரத்தில்தீக்குளித்துஉயிர்துறப்பதென்று தீர்மானித்தவன், அந்தக் களத்தை ஒருமுறைக்கு இருமுறையாவது பார்வையிட்டிருக்கவேண்டும்.

பசிப்பிணியாற்றும் வடலூரின் அணையா நெருப்பைப் போலவே, தமிழராய்ப் பிறந்த நம் ஒவ்வொருவரின் இதயத்திலும், தமிழ்மொழி காக்க நெருப்பில் கலந்தவர்களின் பெயர்களும், தமிழினம் காக்க நெருப்பில் கரைந்தவர்களின் பெயர்களும், பசுமரத்தாணி போல் பதிந்திருக்கின்றன. ஈழத்தில் நடக்கும் தமிழின அழிப்புக்கு எதிராக நெருப்போடு நெருப்பாய் கரைந்த தாய்த்தமிழ்நாட்டுத் தமிழர்கள் பட்டியல், அப்துல் ரவூஃப். முத்துக்குமார் என்று நீள்கிறது. ஈழத்தாய் மண்ணில், சிங்கள இன வெறியைத் தகர்த்துத் தமிழ் மக்களைக் காக்க நெருப்பாற்றில் நீந்தியவர்கள் பட்டியல், மில்லர், கயல் - என்று நீண்டு கொண்டே போகிறது.

நெல்லியடி முகாமைத் தகர்க்கத் தன்னைத்தானே வெடி மருந்தாக்கினான் மில்லர்...

தமிழர்களுக்கு அச்சுறுத்தலாய் இருந்த கடல் அரக்கன் 'அபித'வைச் சுக்கு நூறாக்கத் தன்னைத்தானே கண்ணி வெடி ஆக்கிக் கொண்டாள் அங்கயற்கண்ணி என்கிற எங்கள் கயல்...

தங்களது இலக்குகளைத் தகர்ப்பதற்கு முன், கயலும் மில்லரும் எப்படியெல்லாம் தங்களைத் தயார்ப்படுத்திக் கொண்டார்கள் என்பதை நம்மால் மறக்கவே முடியாது.

நெல்லியடி முகாமைத் தகர்க்க தான் ஓட்டிச் செல்லப்போகும் ஜீப்பில் வெடிமருந்துகள் ஏற்றப்பட்டபோது. அந்தப்பணியில் தன்னையும் முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட மில்லர், வரலாற்றின் வார்த்தைகளில் தன் சவப்பெட்டியைத்தானே தயாரித்தவன்: தன் சவப்பெட்டிக்குத் தானே ஆணி அடித்துக் கொண்டவன்.

கயலும் அப்படித்தான்! பருத்தித்துறைக்கும். காங்கேசன் துறைக்கும் இடையேயான கடல்பகுதியில் மீண்டும் மீண்டும் நீந்திப்பார்த்து. இலக்கை நோக்கிய தன் பயணத்தைத் தீர்மானித்திருக்க வேண்டும். அத்தகைய ஆயத்தப்பணிகளால்தான். அபித என்கிற 6000 டன் கடல் அரக்கனை. ஐம்பது கிலோ எடைகூட இல்லாத கயலால். கண்ணிமைக்கும் நொடியில் சாம்பலாக்க முடிந்தது. இதெல்லாம் புராணம் - இதிகாசம் போல இட்டுக் கட்டப்பட்ட வெற்றுக் கதைகளல்ல. எங்கள் மில்லர்களும், எங்கள் கயல்களும், தங்கள் உயிரைக் கொடுத்து எழுதிய வலிமை மிக்க வரலாறு.



அந்த வரலாற்றின் தொடர்ச்சிதான். முத்துக்குமார். தன் இலக்கைத் தானே தீர்மானித்தான். தன்னைத்தானே ஆயத்தப்படுத்திக் கொண்டான். இனவெறியோடும். கொலை வெறியோடும் திரிந்த சிங்கள அரசுக்கு ஆயுதங்களைக் கொடுத்துதவிய இந்திய அரசின் மனச்சாட்சியை உலுக்க. இந்திய அரசின் அலுவலகங்கள் இருக்கும் சாஸ்திரி பவனைத் தனக்கான களமாக மாற்றினான். அந்தக் களத்தில், வெந்து தணிந்தது அந்த வீரத் தமிழ் மகனின் திருமேனி.

மில்லர் - கயல் முத்துக்குமார் என்கிற இந்த நெருப்பு மலர்களின் ஆயத்தப் பணிகள் மிக மிக முக்கியமானவை. நாம் பின்பற்ற வேண்டிவை. இனப்படுகொலைக்கு நீதி கேட்பது, பொதுவாக்கெடுப்புக்குக் குரல் கொடுப்பது உள்ளிட்ட கடமைகளை நிறைவேற்ற, நம்மை நாமே தயார்ப்படுத்திக் கொள்வது அவசியம். திட்டவட்டமான இலக்குகள், தெளிவான பாதைகள். பின்வாங்காத ஓர்மம்.. என்று நம்மை நாமே பட்டை தீட்டிக் கொள்வது மிகவும் முக்கியமானது.

**தொடர்ச்சி: பக்கம் 15**

# ஈழத் தமிழரின் அரசியல் உரிமைக்காக தமிழ்நாடு முதலமைச்சர் பிரதமருக்கு கடிதம் எழுதியதை வரவேற்கிறோம்! தமிழினவழிப்புக்கு ஈடுசெய் நீதியாக அரசியல் தீர்வு அமைய வேண்டும்!

## ஈழத்தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பு அறிக்கை

கடந்த சனவரி 11 ஆம் நாள் ஈழத் தமிழரின் அரசியல் உரிமைகளைப் பாதுகாத்திட தூதரக உறவுகளைப் பயன்படுத்தி உடனடியாக சிறிலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு தமிழ்நாடு முதலமைச்சர் பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதியிருப்பதை ஈழத் தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பு வரவேற்கிறது.

அதுபோலவே, 'தமிழால் இணைவோம், தரணியில் உயர்வோம்' என்ற முழக் கத்துடன் தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் முன்னெடுத்து வரும் அயலக தமிழர் மாநாடு பாராட்டுக்குரியது. உலகெங்கும் உள்ள தமிழர்களின் பிரதிநிதிகளை அழைத்து பண்பாடு, கலை, இலக்கியம், வணிகம், தொழில் வளர்ச்சி ஆகியவை குறித்து பேசுவது தமிழர்கள் கூட்டுப் பலத்துடன் உயர்வதற்கு உதவும் என்ற வகையில் இம்முயற்சி தொடர வேண்டும்.

தமிழீழ தாயகத்தில் இருந்து அரசியல் கட்சி தலைவர்கள் தமிழ்நாடு முதலமைச் சரை நேரில் சந்தித்து கோரிக்கை விடுத்திருந்ததை தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் உடனடியாக ஒன்றிய அரசுக்கு கடிதம் எழுதியது ஈழத் தமிழர்களின் பக்கம் தமிழ்நாடு நிற்கிறது என்ற நம்பிக்கையை மீண்டும் ஏற்படுத்தியுள்ளது.

2009 ஆம் ஆண்டு நடைபெற்ற முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்குப் பின்னான இந்த 16 ஆண்டுகளில் இலங்கை தீவின் வடக்கு கிழக்கை தாயகமாக கொண்டிருக்கும் ஈழத் தமிழர்கள் கட்டமைப்பு வகைப்பட்ட இனவழிப்புக்கு ( Structural Genocide) ஆளாகிவருகின்றனர். நிலப்பறிப்பு, பௌத்த விகாரைகளை நிறுவி பண்பாட்டுத் திணிப்பு, சிங்களக் குடியேற்றங்கள், படைக் குவிப்பு உள்ளிட்ட நடவடிக்கைகள் திட்டமிட்டு செயல்படுத்தப் படுகின்றன. அத்தகைய ஓர் கட்டமைப்பு வகைப்பட்ட இனவழிப்பின் பகுதியாகத்தான் புதிய அரசியல் அமைப்பு ஒன்றை கொண்டு வருவதன் மூலம் ஒற்றையாட்சியை மேலும் வலுப்படுத்தப் பார்க்கின்றது சிங்கள பௌத்தப் பேரினவாதம்.

தாயகம், தேசியம், தன்னாட்சி என்ற அடிப்படையில் ஒற்றையாட்சி அரசமைப்பு மாற்றப்பட்டு கூட்டாட்சி ஏற்பாடு தமிழர்களுக்கு உறுதிசெய்யப்பட வேண்டும். அது மட்டுமின்றி, முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலைக்கு உள்ளான தமிழர்களுக்கு பன்னாட்டு சட்டநெறிகளின்படி ஈடுசெய் நீதியாக ( Remedial Justice) தமிழர்களின் இறைமை மீட்டளிக்கப்பட வேண்டும்.

கடிதத்தில் குறிப்பிட்டது போல் ஈழத் தமிழர்கள் இனவழிப்புக்கு உள்ளாகி இருக்கிறார்கள் என்பது தமிழர்களின் கூற்று மட்டுமல்ல, நம்மைத் தாண்டி பலரும் அதை அறிந்தேற்று வருகின்றனர். எடுத்துக்காட்டாக, 2011 ஆம் ஆண்டு ஐ.நா. அமைத்த மூவல்லுநர் குழு 40,000 த்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்று அறிக்கை தந்துள்ளது. மேலும் 2014 ஆம் ஆண்டு ஐ.நா. உள்ளக ஆய்வறிக்கை 70,000 த்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்று சொல்லியுள்ளது. கனடா மே 18 ஆம் நாளை தமிழின அழிப்பு நாளாக ஏற்றுள்ளது. அண்மையில் ஸ்காட்லாந்து நாடாளுமன்றம் தமிழர்கள் இனவழிப்புக்கு உள்ளாகி இருப்பதை அறிந்தேற்றுள்ளது.

மேலும் தமிழ்நாட்டு சட்டப்பேரவையில் போர்க்குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள், இனவழிப்பு குற்றங்களுக்குப் பன்னாட்டுப் புலனாய்வு நடத்தப்பட வேண்டும் என்றும் பொதுவாக்கெடுப்பு நடத்தி அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஒன்றிய அரசு எப்போதும் தமிழ்நாடு அரசின் நிலைப்பாட்டை துச்சமாக மதித்து சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு துணை செய்தே வந்துள்ளது. எனவே, தமிழ்நாட்டு சட்டப்பேரவை தீர்மானத்தை நினைவுபடுத்தி, இனவழிப்பையும் கருத்தில் கொண்டு ஈடுசெய் நீதியாக அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்று ஒன்றிய அரசுக்கு வலியுறுத்த வேண்டும் என்று சுட்டிக்காட்டுகிறோம்.

மேலும், இனவழிப்புக்கு நிதியும் அரசியல் தீர்வுக்கு பொதுவாக்கெடுப்பும் கோரும் தமிழ்நாடு சட்டப்பேரவை தீர்மானத்தை பன்னாட்டு அரங்கிற்கு கொண்டு செல்வதற்கு தனித்தும் இந்திய அரசின் வழியாகவும் தொடர்ந்து முயல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

தமிழ்நாடு அரசு ஈழத் தமிழரின் அரசியல் தீர்வுக்காகவும் இனவழிப்புக்கு நீதி பெறவும் தொடர்ச்சியாக இந்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று ஈழத் தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பு சார்பாக கேட்டுக்கொள்கிறோம்.

**தோழமையுடன்**
**கொளத்தூர் தா.செ. மணி**
தலைமை ஒருங்கிணைப்பாளர்,
ஈழத்தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பு

### இந்த ஆண்டு இறுதி ... தொடர்ச்சி...

தீவின் பொருளாதாரம் “சரிவை நெருங்கிவிட்டது என்றும், மதுரோவில் ஒரு முக்கிய பயனாளியை இழந்த பிறகு அரசாங்கம் ஒருபோதும் இவ்வளவு பலவீனமாக இருந்ததில்லை” என்றும் அதிகாரிகள் நம்புவதாக கூறப்படுகிறது. அமெரிக்க அதிகாரிகளுக்கு இதுவரை எந்த உறுதியான திட்டமும் இல்லை என்று கூறப்படுகிறது, ஆனால் ஹவானாவில் “ஒரு ஒப்பந்தத்தை முறித்துக் கொள்ள விரும்பக்கூடிய” ஒரு அரசாங்க அதிகாரியை அடையாளம் காணும் முயற்சியில் அவர்கள் ஏற் கனவே மியாமி மற்றும் வாஷிங்டனில் உள்ள கியூப நாடுகடத்தப்பட்டவர்கள் மற்றும் குடிமை குழுக்களுடன் சந்திப்புகளை நடத்தி வருகின்றனர்.

இந்த அறிக்கை வாஷிங்டனில் இருந்து தொடர்ச்சியான அதிகரித்து வரும் அச்சுறுத்தல்களைத் தொடர்ந்து வருகிறது, இந்த மாத தொடக்கத்தில் ட்ரம்ப் கியூபாவிற்கு ஒரு இறுதி எச்சரிக்கையை வெளியிட்டு, “மிகவும் தாமதமாகிவிடும் முன் ஒரு ஒப்பந்தம் செய்ய” வலியுறுத்தினார்.

குறைந்த விலை கொண்ட வெனிசுலா எண் ணெயை இழந்த தீவு “வீழ்ச்சியடையத் தயாராக உள்ளது” என்று அவர் கூறினார், மேலும் அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் மார்கோ ரூபியோ எதிர்காலத்தில் கியூபாவை வழிநடத்த முடியும் என்று நகைச்சுவையாகக் குறிப்பிட்டுள்ளார்.

கியூபாவிற்கு எதிரான ஆட்சி மாற்ற சதி, வெனிசுலாவில் ஒரு அமெரிக்க இராணுவ நடவடிக்கை யின் விளைவாக ஜனாதிபதி மதுரோ மற்றும் அவரது மனைவி கடத்தப்பட்டார், அத்துடன் டஜன் கணக்கான வெனிசுலா மற்றும் கியூப பாதுகாப்புப் பணியாளர்கள் கொல்லப்பட்டனர்.

அமெரிக்க நடவடிக்கை சர்வதேச கண்டனத்தைத் தூண்டியுள்ளது. ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் இதை சர்வதேச சட்டத்தின் “அப்பட்டமான மீறல்” என்று சாடினார்.

### கிவுல் ஓயா திட்டம் ... தொடர்ச்சி...

இருக்கப்போகிறது.

எனவே, பாதிக்கப்பட்ட மக்களின் பங்களிப்புடன், வெளிப்படையான ஆய்வுகளின் பின்னரே இத்திட்டம் குறித்து இறுதி முடிவு எடுக்கப்பட வேண்டும். ஆனால் தற்போது அவ்விதமான நிலைமைகள் காணப்படவில்லை. நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு விட்டது, அமைச்சரவை அனுமதி அளிக்கப்பட்டு விட்டது. இதற்குப் பின்னர் கலந்துரையாடல்களை செய்து மீண்டும் களத்திலிருந்து ஆரம்பிப்பது சாத்தியமாகுமா?

ஆகவே கலந்துரையாடல் என்ற தேசிய மக்கள் சக்தியின் காய்நகர்த்தலுக்கான தந்திரோபாய ரீதியான வியூகம் வகுக்கப்பட்டால் மட்டுமே இத்திட்டத்தினை நிறுத்த முடியும். இனரீதியான குடிப்பரம்பல் வவுனியா வடக்குக்குள் பேரலையாக வருவதை தடுக்கலாம்.

• • •






# தமிழர் வள ஆலோசனை மையம்–அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் இணைந்து நடத்திய ‘தமிழர் திருநாள் 2026’



### ஒசுலோவில் மரபும் மொழியும் மலர்ந்த ஓர் எழுச்சி!

உளழிகள் புரளினும், வாழ்விடங்கள் பெயர்ந்தும், தமிழரின் தனித்தன்மை மங்காது நிலைத்திருக்க வேண்டும் என்ற உயரிய எண்ணத் தூண்மேல், நோர்வேயில் தமிழர் வள ஆலோசனை மையமும் அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடமும் பல ஆண்டுகளாகத் தளராது பணிபுரிந்து வருகின்றன. வளாகங்களாக விரிந்த கல்வி-பயிற்சி வலையமைப்பினூடே ஆயிரத்திற்கும் மேலான இளையோர், மொழித்திறன் மட்டுமன்றி கலைநயம், பண்பாட்டு ஒழுக்கம், மரபுத் தெளிவு ஆகியவற்றையும் ஒருங்கே வளர்த்தெடுத்து வருகின்றனர்.




“சொல் வளம், கலை வளம், வாழ்க்கை ஒழுங்கு—இவை செழிக்கச் செழிக்க ஓர் இனத்தின் ஒருமை இறுகும்” என்ற வழிகாட்டுச் சிந்தனையை முன்வைத்து, நோர்வே அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் பல துறைகளையும் தன்னுள் ஒன்றிணைக்கும் பண்பாட்டு நடுவமாகத் திகழ்கிறது. தமிழ்க் குமுகாயத்தின் நாளைய தேவைகளை முன்னுணர்ந்து திட்டமிடும் தமிழர் வள ஆலோசனை மையத்துடன் இணைந்து, தமிழர் திருநாளாகிய தைப்பொங்கல் விழாவை ஆண்டுதோறும் சிறப்புமிகுந்த அளவில் நடத்தி வருவது, புலம்பெயர் சூழலில் தமிழ்ப்பண்பாட்டின் உயிர்ச் சுடரை மேலும் ஒளிர்விக்கும் அரும்பணியாகும். அவ்வகையில், 17.01.2026 அன்று ஒசுலோவின் Sognsveien இல் அமைந்துள்ள Norges idrettshøyskole அரங்கில் முற்பகல் 11:30 முதல் மாலை 07:30 வரை நடைபெற்ற இவ்விழா, அரசியல், மாநகர, மாவட்டச் சிறப்பினர்கள் மற்றும் பண்பாட்டுத் துறையினர் உள்ளிட்ட பலரின் பங்கேற்போடு, பனி நிலத்திலும் தமிழ்ப் பண்பாட்டின் செம்மைத் திருவிளக்கு அணையாது எரிகிறது என்பதற்கொரு வெளிச்சமான அறிகுறியாக நிற்கிறது.

இவ்விழாவை ஒருங்கிணைப்பதில் அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடத்தின் தலைமை மற்றும் பொறுப்பாளர்கள் ஆற்றிய பணி குறிப்பிடத்தக்கதாக அமைந்தது.

### மங்கலத் தொடக்கம்: இன்னியம் முழங்கிய அணிவகுப்பு

விழாவின் தொடக்கமே அரங்கின் உள்ளகத்தைக் கிளர்த்தியது. தமிழரின் வீரத்தையும் செழுமையையும் பறைசாற்றும் ‘இன்னியம்’ முழங்கக் கலைக்கூட மாணவர்கள் அணிவகுத்தனர். இவ்விழாவின் சிறப்புக் கூறாக, சிறுவர்கள்

தொகுப்பு: **கதிர்**
நோர்வே தமிழ் முற்றம்

நம் மரபார்ந்த ஆடைகளை அணிந்து, கைகளில் வண்ணங்கள் தீட்டப்பட்ட பொங்கல் பானைகளை ஏந்தியவாறு, இன்னிய இசை முழக்கத்தின் முன்னணியில் சான்றோர்களைப் போல வரிசையாக நடந்து சென்றமை கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.



இதனைத் தொடர்ந்து, வண்ணவயமான ஆடைகளை அணிந்து மயிலைப் போன்ற நளினத்துடன் கலைக்கூட மாணவர்கள் கால் பதித்து வந்தனர். திருவாட்டி பாமினி பார்வதிதாசன் அவர்களின் நெறியாள்கையில் தாரை, தப்பட்டை மற்றும் பறை போன்ற இசைக்கருவிகள் முழங்க, ஆடல் கலைஞர்களும் இசைக்கலைஞர்களும் ஒருசேர அணிவகுத்து நின்றனர். பனி நாட்டின் நடுவிலும் தாயகத் திருவிழா உணர்வு பெருகி, அரங்கையே ஒரு விழாக் கோலமாக மாற்றியது.

இந்த எழுச்சிமிக்க அணிவகுப்பைத் தொடர்ந்து, விழாவின் சிறப்பு விருந்தினர்கள், அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடத்தின் பொறுப்பாளர்கள், ஆசிரியர்கள், பணியாளர்கள் மற்றும் தமிழர் வள ஆலோசனை மையத்தின் பொறுப்பாளர்கள் வரிசையாக அணிவகுத்து வந்தனர்.



இதனைத் தொடர்ந்து மங்கல விளக்கு ஏற்றப்பட்டது. பின்னர், தாயக விடுதலைக்காக தம்மை ஈகம் செய்த மாவீரர்களுக்கும், இன்னுயிரை ஈந்த நாட்டுப்பற்றாளர்களுக்கும், போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் நெஞ்சார்ந்த ‘அகவணக்கம்’ செலுத்தப்பட்டது.

விழாவின் வரவேற்புரையை அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூட மாணவர்கள் தமிழிலும், நோர்வே மொழியிலும் வழங்கினர். இது மேடைக்கு ஓர் ஒழுங்கையும் செம்மையையும் சேர்த்ததோடு, புலம்பெயர் வாழ்வின் இயல்பையும் தேவையையும் எதிரொலிக்கும் இருமொழிப் பாலமாகவும் அமைந்தது. தாய்மொழிப் பற்றைத் தக்கவைத்தபடியே, வாழும் நாட்டின் குமுகத்துடன் நல்லிணக்கத்தை வளர்க்கும் சிறந்த அணுகுமுறை இதுவெனப் பார்வையாளர்கள் மெச்சினர்.

### நோர்வேத் தலைவர்களின் வாழ்த்துகள்: ஏற்புரிமையின் ஒளிச்சுடர்

புலம்பெயர் சூழலில் தமிழ் மொழிக்கும் கலைக்கும் கிடைக்கும் ஏற்புரிமை, இவ்விழாவில் தெளிவாகப் பளிச்சிட்டது. நோர்வே தலைமை அமைச்சர் Jonas Gahr Støre மற்றும் பண்பாட்டுத்துறை அமைச்சர் Lubna Jafferi ஆகியோர் காணொளி வாழ்த்துகளைப் பகிர்ந்தனர். ஒசுலோ மாநகர முதல்வர் Anne Lindboe அவர்களும் வாழ்த்துச் செய்தியை வழங்கினார்.

### மேலும் அரசியல்-குமுகாயத் தலைவர்கள் நேரில் கலந்துகொண்டு உரையாற்றினர்:



முன்னாள் நோர்வே தலைமை அமைச்சர் Erna Solberg (பழமைபேண் கட்சி), Siavash Mobasheri (செங்கட்சி), Kjell Arne Hermansen (முதல்வர், Drammen நகராட்சி), Haakon Kvenna Veum (துணை முதல்வர், Bærum நகராட்சி) உள்ளிட்டோர். தமிழர்கள் பனி தேசத்தில் வளர்த்தெடுக்கும் கலைத் திறனையும் குமுகாய ஒருமைப்பாட்டையும் அவர்கள் வியந்து பாராட்டியமை, மாணவர்களுக்கு ஊக்கமாகவும் பெற்றோருக்கு உறுதியாகவும் அமைந்தது.

### கலைகளின் கூடல்: பல்வேறு வளாகங்கள் - ஒரே மேடையில்

விழாவின் உயிர்நாடியாகத் திகழ்ந்தது மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள். அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடத்தின் பல்வேறு வளாகங்களைச் சேர்ந்த மாணவர்கள், மாதக்கணக்கான பயிற்சியின் அறுவடையை மேடையில் பகிர்ந்தனர்.



### நடன வரைவுகள்:

றொம்மன் வளாக மாணவர்கள், ரோமரிக்க வளாக மாணவர்கள் எனப் பல வளாகங்களின் ஆடல் நிகழ்வுகள் நடைபெற்றன. கும்மி, கோலாட்டம் மற்றும் ‘தை பிறந்தால் வழி பிறக்கும்’ போன்ற ஆடல் வடிவங்கள் வாயிலாகப் பொங்கல் திருவிழா வண்ணங்களை நிறைத்து நறுமணத்தையும் அள்ளி வீசியது.

### இன்னிசை விருந்து:

புல்லாங்குழல், யாழ், தண்ணுமை (மிருதங்கம்), நரம்பிசைக்கருவி (வயலின்) ஆகியவை ஒரே மேடையில் ஒலித்த வேளை, இசை என்பது மொழியைத் தாண்டி, ஓர் இன்ப உலகுக்கு எம்மை அழைத்துச் சென்றது.

### தாள ஒழுங்கிசை:

மோட்டன்சுறூட் வளாகத்தின் சார்பில் வழங்கப்பட்ட தாள ஒழுங்கிசை, புலம்பெயர் குடும்ப வாழ்வில் நாள்தோறும் நிகழும் மாற்றங்களையும் மனநிலைகளையும் தாள-நாடகத்

தொடர்ச்சி: பக்கம் 12

## தமிழர் வள ஆலோசனை ... தொடர்ச்சி...

தோற்றத்தில் காட்டிப் பார்வையாளர்களுக்கு சிந்தனை யூட்டியது.

### கல்வியையும் கலையையும் இணைத்த சிந்தனையூட்டும் நிகழ்ச்சிகள்:

ஆத்கர்/ஃபாரும் வளாக மாணவர்களின் பட்டிமன்றத்தில் மொழி-எழுத்து தொடர்பான கருத்துகள் நேர்த்தியாக முன் வைக்கப்பட்டன.



தொய்யன் வளாக மாணவர்களின் பாவரங்கில் "தமிழும் அறிவியலும்" இணையும் இக்காலச் சூழல் நயமாகப் பகிரப்பட்டது.

லோரென்சுகூக் வளாக மாணவர்களின் வில்லுப்பாட்டு, பழமையான கலைவடிவம் வழியே புதுமையான கருத்தைத் தந்து அரங்கின் கவனத்தை ஈர்த்தது.

### வரலாற்று நாடகம்:

றொம்மன் வளாகத்தின் சார்பில் அறத்தின் மேன்மையையும் வீரத்தின் பொருளையும் விளக்கும் வரலாற்று நாடகம் மேடையில் உயிர்ப்புடன் அரங்கேறியது.

### உழவர் தாத்தா: மரபின் பொருள் சிறுவர்களுக்கு அருகில்....

தமிழர் திருநாளின் அடையாளமாக 'உழவர் தாத்தா' மேடைக்கு வந்தபோது, பிள்ளைகளின் முகத்தில் வியப்பும் மகிழ்ச்சியும் பொங்கியது. தோளில் ஏருடனும் கரும்புக் குவியலுடனும் வந்த தாத்தா, உழைப்பின் மதிப்பைச் சிரிப்போடு சொல்லிக் கொடுத்து, சேற்று வயலில் நாற்று நடும் உழவரின் இன்றியமையாமையை அனைவருக்கும் புலப்படுத்தினார்.

### விருந்தோம்பலும் நலத்திட்டங்களும்:

இடைவேளையில் வழங்கப்பட்ட சுவையான பொங்கலும் நண்பகல் உணவும் தமிழர் விருந்தோம்பலின் அடை யாளமாக இருந்தன.

### அன்னை இசைக்குழுவின் இன்னிசை விருந்து:

2014-ஆம் ஆண்டு அன்னை கலைக்குழுவின் முயற்சியால் தொடங்கப்பட்ட "அன்னை இசைக்குழு", அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூட மாணவர்களை ஒன்றிணைத்துச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இவ்வாண்டு ஆசிரியர் திரு இரவீந்திரன் நடேசன் மற்றும் ஆசிரியர் திரு இராசேந்திரன் கணேசு ஆகியோரின் நெறியாள்கையில் உருவான இந்த இசைக்குழுவின் இன்னிசை நிகழ்ச்சி, விழாவிற்குப் பெருமை சேர்த்தது.

75 அகவைக்கு மேற்பட்ட மூத்தோர்களுக்கான தனிச்சிறப்பான நலத்திட்டங்கள் குறித்த அறிவுரைகள் வழங்கப்பட்டன. இது 'விழா ஒரு பண்பாட்டு நாளைத் தாண்டி குமுகாயத் தேவைகளுக்கான சந்திப்புத் தளமாகவும் இருக்க முடியும்' என்பதை மெய்ப்பித்தது.

### கல்வி-தொழில்நுட்பம்-புதிய முயற்சிகள்:

நோர்வே தமிழ்க் குமுகத்தின் கல்விப் பணிகளை அடுத்த தளத்திற்கு எடுத்துச் செல்லும் நோக்கில், 2026-ஆம் ஆண்டில் 'புதியவழி கற்றல் முறை' எனும் கற்றல்–தொழில்நுட்ப இணைப்புத் திட்டம் காணொளி வாயிலாகச் சிறப்பாக அறிமுகப்படுத்தப்பட்டது. இந்நிகழ்வின் ஓர் எல்லைக்கல்லாக, மாணவர்களின் கைவண்ணத்தில் உருவான சிறுவர் கதை நூல்கள் வெளியிடப்பட்டன. அத்துடன், கலை மற்றும் பல்துறைகளில் சிறந்து விளங்கிய திறவினையாளர்களுக்குச் சிறப்பாரங்கள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டது.

### தொகுப்பும் நிறைவும்: இருமொழித் தலைமுறையினரின் வெளிச்சம்

நிகழ்ச்சிகளைத் தொய்யன் வளாக மாணவர்கள் தமிழ் மற்றும் நோர்வே மொழிகளில் தொகுத்து வழங்கிய நடை, புலம்பெயர்ந்த இருமொழித் தலைமுறையினரின் திறன்களைத் தெளிவாகக் காட்டியது. இறுதியில் அன்னை பொறுப்பகத்தின் சார்பில் நன்றியுரை வழங்கப்பட்டு, ஆசிரியர்கள், பணியாளர்கள், பெற்றோர், மாணவர்கள், துணைநிற்போர் அனைவரின் தன்னளிப்பும் நன்றியுடன் நினைவுகூரப்பட்டது.

### முடிவுரை: பனி போர்த்திய நாட்டிலும் அன்பு பொங்கும் விழா

பனி போர்த்திய நாட்டிலும் அன்பு பொங்கும் விழாவாகத் 'தமிழர் திருநாள் 2026' அமைந்துள்ளது. மொழியைப் பேணுதல், மரபைத் தொடர்தல், குமுகத்தை ஒருங்கிணைத்தல், இளம்தலைமுறையினரை இணைத்தல்—இந்த நான்கும் ஒரே நாளில் ஒரே மேடையில் ஒன்றுகூடிய பொழுதாக இவ்விழா நினைவில் நிலைத்து நிற்கின்றது. "தமிழ் எங்கள் அடையாளம்" என்ற உறுதியுடன், இவ்விழா இனிதே நிறைவுபெற்றது.

• • •

## டிரம்ப் மிரட்டல் ... தொடர்ச்சி...

தொழில்துறை இறக்குமதிகள் மீதான வரிகளை நீக்கியது, மேலும் அமெரிக்காவில் $600 பில்லியன் முதலீடு செய்து $750 பில்லியன் மதிப்புள்ள அமெரிக்க எரிசக்தியை வாங்க ஒப்புக்கொண்டது.

கிரீன்லாந்தை கையகப்படுத்துவதற்கான தனது திட்டத்தை எதிர்க்கும் எட்டு ஐரோப்பிய நேட்டோ நாடுகள் மீது கடந்த வாரம் ட்ரம்ப் கூடுதலாக 10% வரி விதிப்பதாக அறிவித்தார். இந்தப் பிரதேசத்தில் ஜூன் மாதத்திற்குள் ஒரு ஒப்பந்தம் எட்டப்படாவிட்டால் இந்த அபராதம் 25% ஆக அதிகரிக்கும் என்று அமெரிக்க ஜனாதிபதி எச்சரித்துள்ளார்.

## பயங்கரவாதத் தடை சட்டம் ... தொடர்ச்சி...

வைத்து பழி வாங்கும் நிலை காணப்படுகிறது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கடந்த காலங்களில் இதற்கு எதிராக போராடியவர்கள் ஆட்சியை கைப்பற்றியதும் சட்டத்தை இல்லாமல் ஒழிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாத நிலையில் உள்ளார்கள்.

இது குறித்து சமூக செயற்பாட்டாளர் நியாஸ்தீன் தெரிவிக்கையில், கடந்த பயங்கரவாத ஈஸ்டர் குண்டு தாக்குதலின் போது பல முஸ்லீம் இளைஞர்களையும் சமூக அரசியல்வாதிகள் என பலரை பயங்கரவாதம் எனும் கொடூர சட்டத்தின் கீழ் பொய்யான வழக்குகளை போட்டு கைது செய்தார்கள். இதனால் அவர்களின் குடும்பம் பல பொருளாதார நெருக்கடிகளை சந்தித்தது. இன்னும் வழக்கு தொடர்வதுடன் சிலர் விடுவிக்கப்படாமல் சிறை வாழ்க்கையில் உள்ளார்கள். இந்த சட்டம் திருத்தப்படுவதை விட முற்றாக ஒழிக்கப்பட வேண்டும். ஜனநாயக நாட்டில் சுதந்திரமாக வாழ வேண்டும் என்றால் தற்போதைய அரசாங்கம் மனித உரிமைகளோடு வாழ கூடிய சூழலை உருவாக்க வேண்டியது ஆட்சியாளர்களின் தலையாய பொறுப்பாகும். எனவே தான் இந்த சட்டம் திருத்தப்படுவதன்றி நீக்கப்பட வேண்டும் என்பதுடன் தமிழ், முஸ்லீம் சமூகம் தங்கள் மதக் கடமைகளை சுதந்திரமாக செய்யவும் உரிமைகளை அனுபவிக்கவும் வழி விடவேண்டும் என்பதை கூறுகிறேன்"

ஒட்டுமொத்தமாக சட்டங்களை திருத்துவதற்கான நிலையை இல்லாமல் ஆக்கி முற்றாக பயங்கரவாத தடை சட்டத்தை இல்லாமல் ஆக்க அனைத்து தமிழ் பேசும் அரசியல் கட்சி தலைவர்கள் அரசாங்கத்துக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுக்க வேண்டும் என்பதோடு அரசாங்கமும் இதில் முழு கவனம் எடுக்க வேண்டும் என்பது எதிர்பார்ப்பு.

## புது வடிவத்துடன் காணி ... தொடர்ச்சி...

அவர்களின் உழைப்பால் உருவான இந்த நாட்டின் செல்வத்தில் அவர்களுக்கும் பங்குண்டு என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும். அந்தப் பங்கு வெறும் சம்பள உயர்வில் மட்டும் அடங்கிவிடாது. அது மலையகப் பெருந்தோட்ட மக்கள் கால் ஊன்றி நிற்பதற்கான சொந்த நிலத்திலும், அவர்கள் தலை நிமிர்ந்து வாழ்வதற்கான காணி உரிமையிலுமே தங்கியுள்ளது. அரசாங்கம் இந்த நியாயமான கோரிக்கைகளுக்கு செவிசாய்க்கத் தவறினால், இது போன்ற போராட்டங்கள் கொழும்பின் வீதிகளில் இருந்து சர்வதேச மேடைகள் வரை இன்னும் தீவிரமடையும் என்பதில் ஐயமில்லை.

அதேநேரம் இந்த விடயத்தில் மலையக இளைஞர் யுவதிகளுக்கும் பல முக்கிய பொறுப்புகள் காணப் படுகின்றன. குறிப்பாக பழைய காலத்துப் போராட்ட முறைகளிலிருந்து விலகி, இன்றைய இளைஞர்கள் 'அறிவுசார் போராட்டத்தை' முன்னெடுக்க வேண்டும். காணிச் சட்டங்கள், அரச காணிகளைப் பகிர்ந்தளிக்கும் நடைமுறைகள் மற்றும் அரசியலமைப்பு வழங்கியுள்ள உரிமைகள் குறித்து ஆழமான அறிவைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

குறிப்பாக, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்தி, தங்களுக்குச் சேர வேண்டிய நிலங்கள் மற்றும் வீட்டுத்திட்டங்கள் ஏன் தாமதிக்கப்படுகின்றன என்பதைக் கேள்வி கேட்கும் துணிச்சலை வளர்த்துக்கொள்ள வேண்டும். அத்துடன் இன்றைய டிஜிட்டல் உலகில், சமூக ஊடகங்கள் ஒரு வலிமையான ஆயுதமாகும். தோட்டப்புறங்களில் மக்கள் வாழும் அவல நிலை, இடநெருக்கடி மற்றும் அடிப்படை வசதியற்ற லயன் அறைகளை காணொளிகளாகவும் புகைப் படங்களாகவும் இளைஞர்கள் ஆவணப்படுத்த வேண்டும். இந்தப் பதிவுகளை சர்வதேச மனித உரிமை அமைப்புகளின் கவனத்திற்குக் கொண்டு செல்வதன் மூலம், அரசாங்கத்திற்கு உலகளாவிய ரீதியில் அழுத்தங்களை உருவாக்க முடியும். இவ்வாறு அனைவரது கூட்டு முயற்சியின் ஊடாகவே மலையக மக்களின் அடிப்படை உரிமையான காணி உரிமையை உறுதிப்படுத்த முடியும்.

## காசாவுக்கான அமைதி ... தொடர்ச்சி...

தொட்டதாகத் தோன்றியது, இந்த முயற்சி "ஐக்கிய நாடுகள் சபை உட்பட பலருடன் இணைந்து செயல்படும்" என்றும், உலகம் முழுவதும் உள்ள பிற முக்கியமான இராஜதந்திர பிரச்சினைகளையும் பட்டியலிட்டார்.

ட்ரம்பின் கருத்துகளுக்குப் பிறகு கருத்து தெரிவிக்கையில், அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் மார்கோ ரூபியோ, காசாவில் போர்நிறுத்தம் நீடிப்பதை உறுதி செய்வதே வாரியத்தின் முன்னுரிமை என்றும், ஆனால் அந்த அமைப்பிற்கான சாத்தியக்கூறுகள் "முடிவற்றவை" என்றும் கூறினார்.

வெள்ளை மாளிகையின் மூத்த ஆலோசகரும் ரியல் எஸ்டேட் டெவலப்பருமான ட்ரம்பின் மருமகன் ஜாரெட் குஷ்னர், பாலஸ்தீன அரசை நோக்கிய பாதைக்கான திட்டங்களைக் குறிப்பிடாமல் காசாவில் அமைதி வாரியத்தின் வளர்ச்சித் திட்டங்கள் குறித்த விவரங்களை கோடிட்டுக் காட்டினார்.

அமைதி வாரியம் அதன் தலைவராகவும், மேலே ஒரு "ஸ்தாபக நிர்வாகக் குழு" கொண்டதாகவும் கட்டமைக்கப்படும், இதில் ரூபியோ, குஷ்னர், முன்னாள் ஐக்கிய இராச்சிய பிரதமர் டோனி பிளேர், அமெரிக்க தூதர் ஸ்டீவ் விட்காஃப், அமெரிக்க துணை தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ராபர்ட் கேப்ரியல், உலக வங்கி குழுமத் தலைவர் அஜய் பங்கா மற்றும் முதலீட்டு நிறுவனமான அப்பல்லோ குளோபல் மேனேஜ்மென்ட்டின் தலைமை நிர்வாக அதிகாரி மார்க் ரோவன் ஆகியோர் அடங்குவர்.

அறிக்கைகளின்படி, 50 முதல் 60 நாடுகள் குழுவில் சேர அழைக்கப்பட்டுள்ளன, மேலும் 25 நாடுகள் வரை கையெழுத்திட ஒப்புக்கொண்டுள்ளன.

## ஊழலை நிரூபித்தால் ... தொடர்ச்சி...

தன்னைத் தமிழ் மக்களிடமிருந்து பிரிக்கவும், அரசியலில் இருந்து ஓரங்கட்டவும் திட்டமிட்ட வகையில் இவ்வாறான பொய்ப் பிரசாரங்கள் முன்னெடுக்கப் படுவதாகவும் இதில் தனது சொந்தக் கட்சியைச் சேர்ந்த சிலருக்கும் தொடர்புள்ளது எனவும் அவர் குற்றச் சாட்டுகளை முன்வைத்துள்ளார்.

அத்துடன் சபாநாயகர் ஏன் இது குறித்து உடனடியாக ஒரு விசாரணையை ஆரம்பிக்கக்கூடாது எனவும் அரசாங்கத்திடம் அதிகாரம் இருந்தும் ஏன் உண்மையை வெளிக்கொண்டு வரத் தயங்குகிறது என்றும் கேள்வி எழுப்பறனார்.

தன்னைப் பழிவாங்கி பதவியைப் பறிக்கச் சிலர் பகல் கனவு காண்பதாகத் தெரிவித்த சிறிதரன், தான் தமிழ் மக்களின் நலனுக்காகவே உழைப்பதாகவும், எவருக்கும் அடிபணிய வேண்டிய அவசியம் தமக்கு இல்லை என்றும் ஆவேசமாகத் தெரிவித்தார்.

இந்த விவாதத்தின் போது சிறிதரனின் கருத்துகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா கடும் எதிர்ப்புத் தெரிவித்ததால் சபையில் சிறிது நேரம் பரபரப்பு நிலவியது.

## டென்மார்க் கிரீன்லாந்தை ... தொடர்ச்சி...

ரஷ்யாவின் தேசிய பாதுகாப்பு கவுன்சிலுடனான கூட்டத்தில் கூறினார்.

தீவின் உரிமை தொடர்பான மோதலில் ரஷ்யாவுக்கு எந்தப் பங்கும் இல்லை என்று புடின் கூறினார். "இது நிச்சயமாக எங்களுக்கு கவலை இல்லை. அவர்கள் தங்களுக்குள் அதைத் தீர்த்துக் கொள்வார்கள் என்று நான் நினைக்கிறேன்."

அமெரிக்கா 1867 இல் ரஷ்யாவிடமிருந்து அலாஸ்காவையும், இன்று அமெரிக்க விர்ஜின் தீவுகள் என்று அழைக்கப்படும் கரீபியன் பிரதேசத்தையும் 1916 இல் டென்மார்க்கிடமிருந்து வாங்கியதாக அவர் குறிப்பிட்டார். கிரீன்லாந்து $1 பில்லியன் வரை செலவாகும் என்றும் அமெரிக்கா அதை வாங்க முடியும் என்றும் புடின் பரிந்துரைத்தார்.

செவ்வாயன்று(20) பத்திரிகையாளர்களிடம் பேசிய ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ், கிரீன்லாந்தின் விவகாரங்களில் தலையிட மாஸ்கோ எந்த திட்டமும் இல்லை என்பதை மறுத்தார்.

இந்த வார தொடக்கத்தில் ட்ரம்ப் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்திய கிரீன்லாந்தை அமெரிக்காவுடன் இணைக்க கோபன்ஹேகனை அனுமதிக்காது என்று டென்மார்க் வெளியுறவு அமைச்சர் லார்ஸ் லோக்கே ராஸ்முசென் டாவோஸில் மீண்டும் வலியுறுத்தினார்.

டென்மார்க் 18 ஆம் நூற்றாண்டில் கிரீன்லாந்தை காலனித்துவப்படுத்தியது மற்றும் 1979 இல் அதற்கு சொந்த ஆட்சியை வழங்கியது. இரண்டாம் உலகப் போரின் போது அமெரிக்கா கிரீன்லாந்திற்கு துருப்புக்களை அனுப்பியது மற்றும் வடமேற்கு கடற்கரையில் ஒரு விமான தளத்தை பராமரித்துவருகின்றது.

# இந்த பேரம் இனி வேலை செய்யாது

## உலகை அதிர வைத்த கனடா பிரதமரின் உரை



கடந்த செவ்வாய்க்கிழமை(20)சுவிட்சர்லாந்தின் டாவோஸில் நடந்த உலகப் பொருளாதார மன்றத்தில் கனேடிய பிரதமர் மார்க் கார்னி ஆற்றிய முக்கிய உரை உலகளவில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.




வக்லாவ் ஹேவலின் 'தி பவர் ஆஃப் தி பவர்லெஸ்' என்ற நூலை மேற்கோள் காட்டி, வளர்ந்து வரும் பெரும் வல்லரசு போட்டிக்கு மத்தியில், நொறுங்கி வரும் விதிகள் சார்ந்த ஒழுங்கில் "பொய்யாக வாழ்வதை" நிறுத்துமாறும். நாடுகள் மிரட்டுபவரை திருப்திப்படுத்துவதை நிறுத்திவிட்டு, அதற்கு பதிலாக உறுதியாக சக்திவாய்ந்தவர்களை பின்னுக் குத் தள்ள வேண்டும் என்றும் கூறினார்.

கார்னி உலகின் மிகவும் தகுதிவாய்ந்த அரசாங்கத் தலைவர்களில் ஒருவர். இங்கிலாந்து வங்கியின் ஆளுநராக இருந்தபோது, பிரெக்ஸிட்டுக்கு வாக்களிப்பதை எதிர்த்து பிரிட்டனை எச்சரித்தார், அதன் விளைவுகள் குறித்த அவரது அனைத்து கணிப்புகளும் கிட்டத்தட்ட நிறைவேறியுள்ளன. மார்க் கார்னி, ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் பொரு ளாதாரத்தில் இளங்கலைப் பட்டமும், ஆக்ஸ்போர்டு பல் கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் முதுகலைப் பட்ட மும், முனைவர் பட்டமும் (டிபில்) பெற்ற பயிற்சி பெற்ற பொருளா தார நிபுணர் ஆவார்.




பயத்தால் டொனால்ட் டிரம்பை ஏமாற்றும் சீரழிந்த தலைவர்களின் உலகில், மார்க் கார்னியின் உரை பலவீனமான தலைவர்களைக் கொண்ட பலவீனமான நாடு களுக்கும், தற்போது ஒரு சமாதானவாதியால் வழிநடத் தப்படும் பிரிட்டன் போன்ற பெரிய நாடுகளுக்கும் கூட நம்பிக்கையின் உண்மையான கலங்கரை விளக்கமாக உள்ளது.

**அவரின் உரையில் தமிழ் வடிவம் வருமாறு:**

கனடாவிற்கும் உலகிற்கும் ஏற்பட்டுள்ளஇந்த திருப்புமுனையில் உங்களுடன் நான் இருப்பது மகிழ்ச்சி - மற்றும் எனதுகடமை - ஆகும்.

இன்று, உலக ஒழுங்கில் ஏற்பட்ட விரிசல், ஒரு நல்ல கதையின் முடிவு மற்றும் பெரும் வல்லரசுகளுக்கு இடையிலான புவிசார் அரசியல் எந்த கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டது அல்லாத ஒரு கொடூரமான யதார்த்தத்தின் ஆரம்பம் என்பது பற்றியே நான் பேசுகின்றேன்.

ஆனால் மற்ற நாடுகள், குறிப்பாக கனடா போன்ற நடுத்தர சக்திகள், சக்தியற்றவை அல்ல என்பதையும் நான் உங்களுக்கு தெரிவிக்க விரும்புகின்றேன்.மனித உரிமை களுக்கான மரியாதை, நிலையான வளர்ச்சி, ஒற்றுமை, இறையாண்மை மற்றும் நாடுகளின் பிராந்திய ஒருமைப் பாடு போன்ற நமது மதிப்புகளை உள்ளடக்கிய ஒரு புதிய ஒழுங்கை உருவாக்கும் திறன் அவற்றிடம் உள்ளது.

அதிகாரம் குறைந்தவர்களின் அதிகாரம் நேர்மையு டன் தொடங்குகிறது. நாம் பெரும் வல்லரசு போட்டியின் சகாப்தத்தில் வாழ்கிறோம் என்பதை ஒவ்வொரு நாளும் நமக்கு நினைவூட்டப்படுகிறது. விதிகளை அடிப்படையாகக் கொண்ட ஒழுங்கு மறைந்து வருகிறது. வலிமையானவர்கள் தங்களால் முடிந்ததைச் செய்கிறார்கள், பலவீனமானவர்கள் தாங்கள் செய்ய வேண்டியதை அனுபவிக்கிறார்கள்.



துசிடிடிஸின் இந்த பழமொழி தவிர்க்க முடியாததாக முன்வைக்கப்படுகிறது, -சர்வதேச உறவுகள் தன்னை மீண்டும் நிலைநிறுத்திக் கொள்வதன் இயல்பான தர்க்கம். இந்த தர்க்கத்தை எதிர்கொண்டால், நாடுகள் இணைந்து செல்ல ஒரு வலுவான போக்கு இருக்கும். இணக்கம். பிரச்ச னையைத் தவிர்க்க. இணக்கம் பாதுகாப்பை வாங்கும் என்று நம்பினாலும்.

அது நடக்காது. எனவே, நமக்கு என்ன விருப்பங்கள் உள்ளன? 1978 ஆம் ஆண்டில், செக் அதிருப்தியாளர் வாக்லாவ் ஹேவல் "சக்தியற்றவர்களின் சக்தி" என்ற கட்டுரையை எழுதினார். அதில், அவர் ஒரு எளிய கேள்வியைக் கேட்டார்: கம்யூனிச அமைப்பு எவ்வாறு தன்னை நிலைநிறுத்திக் கொண்டது?

அவரது பதில் ஒரு காய்கறி கடைக்காரருடன் தொடங்கியது. ஒவ்வொரு காலையிலும், இந்த கடைக்காரர் தனது ஜன்னலில் ஒரு பலகையை வைக்கிறார்: "உலகத் தொழிலாளர்களே, ஒன்றுபடுங்கள்!" ஆனால் அவர் கூட அதை நம்புவதில்லை. யாரும் அதை நம்புவதில்லை. ஆனால் அவர் எப்படியும் ஒரு அடையாளத்தை வைக்கிறார். பிரச் சனையைத் தவிர்க்க, இணக்கத்தைக் குறிக்க, ஒத்துழைக்க. ஒவ்வொரு தெருவிலும் உள்ள ஒவ்வொரு கடைக்காரரும் அதையே செய்வதால், அந்த அமைப்பு தொடர்கிறது.

மொழியாக்கம்: **ஆர்த்தீகன்**

வன்முறை மூலம் மட்டும் அல்ல, ஆனால் அவர்கள் தனிப்பட்ட முறையில் பொய் என்று அறிந்த சடங்குகளில் சாதாரண மக்கள் பங்கேற்பதன் மூலமும்அந்த அமைப்பு தொடர்கிறது..




ஹேவல் இதை "ஒரு பொய்க்குள் வாழ்வது" என்று அழைத்தார். அமைப்பின் சக்தி அதன் உண்மையிலிருந்து அல்ல, ஆனால் அது உண்மையாக இருப்பது போல் செயல்பட ஒவ்வொருவரின் விருப்பத்திலிருந்தும் வருகிறது. மேலும் அதன் பலவீனமும் அதே மூலத்திலிருந்து வருகிறது: ஒருவர் செயல்படுவதை நிறுத்தும்போது - காய்கறி வியாபாரி தனது அடையாளத்தை அகற்றும்போது - மாயை விரிசல் ஏற்படத் தொடங்குகிறது. நிறுவனங்களும் நாடுகளும் தங்கள் அடையாளங்களை அகற்ற வேண்டிய நேரம் இது.

பல தசாப்தங்களாக, கனடா போன்ற நாடுகள் விதிகள் சார்ந்த சர்வதேச ஒழுங்கு என்று நாம் அழைத்ததன் கீழ் செழித்து வளர்ந்தன. நாங்கள் அதன் நிறுவனங்களில் இணைந்தோம், அதன் கொள்கைகளைப் பாராட்டினோம், அதன் கணிக்கக்கூடிய தன்மையால் பயனடைந்தோம். அதன் பாதுகாப்பின் கீழ் மதிப்புகள் சார்ந்த வெளியுறவுக் கொள்கைகளை நாம் பின்பற்ற முடியும்.

சர்வதேச விதிகள் அடிப்படையிலான ஒழுங்கு பற்றிய கதை ஓரளவு தவறானது என்பதை நாங்கள் அறிந் திருந்தோம். வலிமையானவர்கள் வசதியாக இருக்கும் போது தங்களை விலக்கிக் கொள்வார்கள். வர்த்தக விதிகள் சமச்சீரற்ற முறையில் செயல்படுத்தப்பட்டன. மேலும் சர்வதேச சட்டம் குற்றம் சாட்டப்பட்டவர் அல்லது பாதிக் கப்பட்டவரின் அடையாளத்தைப் பொறுத்து மாறுபடும், கடுமையுடன் பயன்படுத்தப்பட்டது.

இந்த புனைகதை பயனுள்ளதாக இருந்தது, மேலும் அமெரிக்க தனியான மேலாதிக்கம், திறந்த கடல்கள், ஒரு நிலையான நிதி அமைப்பு, கூட்டுப் பாதுகாப்பு மற்றும் சர்ச்சைகளைத் தீர்ப்பதற்கான கட்டமைப்புகளுக்கான ஆதரவுபோன்ற பொதுப் நடைமுறைகளை வழங்க

**தொடர்ச்சி: பக்கம் 15**

# அமெரிக்காவும் சோவியத்தின் விதியை எதிர்கொள்ளுமா?

— வேல்ஸில் இருந்து **அருஸ்**



இந்த வாரம் சுவிட்சர்லாந்தின் டாவோஸில் நடந்த உலகப் பொருளாதார மன்றம் உலகின் கவனத்தை அதிகம் ஈர்த்திருந்தது. அங்கு கனேடிய பிரதமர் மார்க் கார்னி ஆற்றிய முக்கிய உரை முக்கியமானது. அமெரிக்காவின் விதிகளை அடிப்படையாகக் கொண்ட சர்வதேச ஒழுங்கு முடிவுக்கு வந்ததால், ஆக்கிரமிப்பு வல்லரசுகளின் வற்புறுத்தலை எதிர்க்கவும் புதிய கூட்டணிகளை உருவாக்கவும் உலகின் நடுத்தர சக்திகள் ஒன்றிணைய வேண்டும் என்று அவர் அழைப்பு விடுத்துள்ள அதேசமயம், ஈரானின் வெளி விவகார அமைச்ர்சர் அதில் பங்கு கொள்ளவும் தடை விதிக் கப்பட்டுள்ளது.




எனினும் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்றம்ப் டாவோஸில் இறங்கிய பிற்பாடு நிலைமை மேலும் மோச மாக மாறியுள்ளது. கடந்த வியாழக்கிழமை(22) ஐ.நாவின் உலக சுகாதார நிறுவனத்தில் இருந்து அதிகாரபூர்வமாக வெளியேறிய அமெரிக்க இதுவரை காலமும் முன்னெடுக் கப்பட்ட உலக மயமாக்கல் என்ற திட்டத்திற்கும் முற்றுப்புள்ளி வைத்துள்ளது. மேலும் காசாவுக்கான அமைதிக் கவுன்ஸில் அமைத்ததன் மூலம் ஐ.நாவின் பணிகளை முற்றாக குறைமதிப்புக்கு உட்படுத்தி அதனை; செயற்பாடுகளை முற்றாக முடக்குவதன் ஊடாக புதியதொரு உலக ஒழுங்க மைப்பை கட்டியமைக்க முற்பட்டுள்ளார் ட்றம்ப்.

இந்த புதிய உலக ஒழுங்கில் ஐரோப்பாவும், அமெரிக்காவும் முன்னரைப்போல இருக்கப்போவதில்லை. 2025 முழுவதும், அமெரிக்காவும் ஐரோப்பாவும் மெதுவாகப் பிரிந்து கொண்டே இருந்தன. புதிய அமெரிக்க நிர்வாகம், ஐரோப்பிய நாடுகள் அமெரிக்காவின் மீது மூலோபாய மற்றும் பொருளாதார சுதந்திரங்களை வழங்குதல், போதுமான பாதுகாப்புச் செலவுகள் இல்லாதது மற்றும், கிரீன்லாந்தை சட்டவிரோத மாக வைத்திருப்பது குறித்து விரைவாகக் குற்றம் சாட்டியது.

பின்னர், 2026 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், புவிசார் அரசியல் மாற்றம் சூடுபிடிக்கத் தொடங்கியது. நிக் கோலஸ் மதுரோ கைப்பற்றப்பட்ட பிறகு, டிரம்ப் தனது கவ னத்தை மீண்டும் கிரீன்லாந்தின் பக்கம் திருப்பினார். அது ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்குமான மோதலை அடுத்த நிலைக்கு எடுத்துச் சென்றுள்ளது.

அரசியல் ஆய்வாளர்கள் என்ன நடக்கிறது என் பதைப் புரிந்துகொள்ள தீவிரமாக முயற்சி செய்கிறார்கள். என்ன நடக்கிறது என்று யாருக்கும் தெரியாது, ஆனால் அவர்கள் அதைப் பற்றி ஏதாவது சொல்ல வேண்டும்; எனவே டிரம்ப் விசித்திரமானவர் மற்றும் பைத்தியக்காரர் என்றும் அவரது செயல்களை பகுப்பாய்வு செய்து கணிப்பதில் எந்தப் பயனும் இல்லை என்றும் அவர்கள் ஒப்புக்கொள்கிறார்கள்.




சிலர் சொல்கின்றனர். ஆனால் ட்ரம்பின் நிர்வாகம் தனித்துச் செயற்படவில்லை. எதிர்கால உலக மாற்றத்தை கணிப்பிட்டு அதில் அமெரிக்காவின் வகிபாகத்தை மீண்டும் தக்கவைக்க முயற்சிக்கின்றனர். அதாவது ட்ரம்பின் முன்னால் ஏன் யார் அமெரிக்க அதிபராக இருந்தாலும் அவர்களின் மன்னாள் வேறு எந்த தெரிவுகளும் இருக்கப் போவதில்லை.

டிரம்பை 'புரிந்து கொள்ள' மேற்கொள்ளப்படும் அனைத்து முயற்சிகளும் அடிப்படையில் தவறாக வழி நடத்தப்படுகின் றன. அவை காலாவதியான முன்னைய உலக ஒழுங்கின் தர்க்கத்திலிருந்து உருவாகின்றன, அங்கு அமெரிக்கா உலகின் பெருநகரமாக நின்றது, விதிகளின் கீழ் செயல்படும் சலுகை பெற்ற கூட்டணிகளின் அமைப்பால் அது சூழப்பட்டிருந்தது. ஆனால் தற்போதைய உலக ஒழுங்கு அவ்வாறானது அல்ல. அதைத் தான் கார்னி கூறியிருந்தார். அதாவது பழைய ஒழுங்கு திரும்பப் போவதில்லை. அதற்காக நாம் துக்கப்படக்கூடாது. ஏக்கம் ஒரு உத்தி அல்ல என தெரிவித்திருந்தார்.

அது தான் உண்மையும் கூட ட்ரம்ப்பும் அவருடன் ஆட்சிக்கு வந்த எதிர்-மேட்டுக்குடியினரும் வேண்டுமென்றே தற்போதைய அமைப்பை அகற்றுகிறார்கள், ஆனால் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இன்னும் செயல் படும் அமைப்பை ஏன் உடைக்க வேண்டும்? என நினைக் கிறார்கள், ஒருவேளை நாம் ட்றம்ப் மீது பாராட்டுகள் பொழிந்தால், அவருடன் ஒரு சுற்று கோல்ஃப் விளையாடி, அவரை “அப்பா” என்று அழைத்தால், அல்லது ரஸ்யாவின் கப்பல்களை கைப்பற்றிவிட்டால், சீனா மீது அழுத்தங்களைப் போட்டால் நிலமை முன்பு இருந்த நிலைக்குத் திரும்பும் எனவும் நினைக்கின்றனர்.

ஆனால் இந்த அணுகுமுறை ஆபத்தானது, அவரது உலகக் கண்ணோட்டத்தில், ட்ரம்ப் ஒரு கணிக்கக்கூடிய வகையில் நிலையான முறையில் செயல்படுகிறார். ஒரு புதிய உலகளாவிய ஒழுங்கை நிலைநிறுத்துவதும், அதற் குள் அமெரிக்காவின் பங்கை மறுவரையறை செய்வதும் டிரம்பிசத்தின் தற்போதைய குறிக்கோள். அதற்காகவே தற்போதைய உலகின் ஒழுங்கையும், விதிகளையும் ட்றம்ப் வேண்டும் என்றே உடைக்கின்றார். புவி மாசடைவதைத் தடுக்கும் பச்சை எரிபொருட்கள் எனப்படும் காற்றாலை மின்சாரத்தில் இருந்து வெளியேறும் படி ஐரோப்பாவை மிரட்டுகின்றார்.




அதற்கு பதிலாக தான் கைப்பற்றும் நாடுகளில் உள்ள எரிபொருட்களை விற்பனை செய்து அமெரிக்காவை காப்பாற்ற முனைந்து நிற்கின்றார். காசாவுக்கான அமைதிக் கவுன்ஸிலிலும் சேரும் நாடுகளிடம் ஒரு பில்லியன் டொலர்கள் கேட்கின்றார். கனிம வளங்களைத் தேடி அலைகின்றார். உலக நாடுகள் மீது வாய்க்கு வந்தபடி வரிகளை வித்து நிதியை திரட்ட முற்படுகின்றார். அதாவது 2000 ஆம் ஆண்டுகளில் தீவிரம் பெற்ற உலகமயமாக்கலின் மறுவிளைவுகளை மேற்குலக நாடுகள் கணிக்கத் தவறிய தன் விளைவுகள் தான் இவை.



உலகில் பல நாடுகள் தொழில்நுட்பம் மற்றும் கல்வியறிவு ஆகியவற்றில் முன்நகர்ந்துவிட்டன. உலக மயமாக்கலும், தொழில்நுட்ப பரிமாற்றங்களும் அதற் கான காரணம். தற்போது அந்த தொழில்நுட்பங்கள் உலக வல்லரசை சவால் செய்கின்றது. அதனால் அமெரிக்கா அடையப்போகும் வீழ்ச்சி அமெரிக்காவின் கொள்கை வகுப்பாளர்களுக்கு நன்கு தெரிகின்றது.




இந்தக் நிலையில், அட்லாண்டிக் கடல்கடந்த கட்டமைப்புகள் உடைந்து வீழ்கின்றன. நேட்டோ பலவீன மாக்கப்படுகின்றது. மேலும் ஐரோப்பிய ஒன்றியம் வீழ்ந்து விட்டால், அதில் உள்ள ட்ரம்ப்ஸ்டுகள் அமெரிக்கா வில் தங்கள் அதிகாரத்தை ஒருங்கிணைத்து பராமரிக்க அதிக வாய்ப்பு உள்ளது. ஒரு வருடத்திற்கு முன்பு, அமெரிக்க துணைத் தலைவர் ஜே.டி. வான்ஸ் மியூனிக் பாதுகாப்பு

தொடர்ச்சி: பக்கம் 15

## இந்த பேரம் இனி ... தொடர்ச்சி...

உதவியது.

எனவே, நாங்கள் அடையாளத்தை சாளரத்தில் வைத்தோம். நாங்கள் சடங்குகளில் பங்கேற்றோம். மேலும் சொல்லாட்சிக்கும் யதார்த்தத்திற்கும் இடையிலான இடைவெளிகளை பெரும்பாலும் வெளியில் கூறுவதை தவிர்த்தோம்.

இந்த பேரம் இனி வேலை செய்யாது. நான் நேரடியாகச் சொல்கிறேன்: நாம் ஒரு மாற்றத்தின் மத்தியில் அல்ல, ஒரு பிளவின் மத்தியில் இருக்கிறோம். கடந்த இரண்டு தசாப்தங்களாக, நிதி, சுகாதாரம், எரிசக்தி மற்றும் புவிசார் அரசியலில் தொடர்ச்சியான நெருக்கடிகள் தீவிர உலகளாவிய ஒருங்கிணைப்பின் அபாயங்களை வெளிப் படுத்தின.

சமீபத்தில், சுங்கவரிகளை அந்நியச் செலாவணியாக. நிதி உள்கட்டமைப்பு வற்புறுத்தலாக. விநியோகச் சங்கிலிகள் சுரண்டப்பட வேண்டிய பாதிப்புகளாக பொருளாதார ஒருங்கிணைப்பை பெரும் சக்திகள் ஆயுதங்களாகப் பயன்படுத்தத் தொடங்கின.

ஒருங்கிணைப்பு உங்கள் கீழ்ப்படிதலுக்கு ஆதாரமாக மாறும்போது, ஒருங்கிணைப்பு மூலம் பரஸ்பர நன்மை என்ற பொய்க்குள் நீங்கள் "வாழ" முடியாது. நடுத்தர சக்திகள் நம்பியிருந்த பலதரப்பு நிறுவனங்கள் - WTO, UN, COP - போன்றன கூட்டுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான கட்டமைப்பு என்ற நிலையில் இருந்து வெகுவாகக் குறைக்கப்படுகின்றன.

இதன் விளைவாக, பல நாடுகள் ஒரே முடிவுகளை எடுக்கின்றன. அவை என்னவெனில் ஆற்றல், உணவு, முக்கியமான கனிமங்கள், நிதி மற்றும் விநியோகச் சங்கிலிகளில்அதிக மூலோபாய சுயாட்சியை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இந்த உந்துதல் புரிந்துகொள்ளத்தக்கது. தனக்கு உணவளிக்கவோ, தன்னைத்தானே எரிபொருளை தேடிக் கொள்ளவோ அல்லது தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்ளவோ முடியாத ஒரு நாட்டிற்கு சில தெரிவுகள் உள்ளன. விதிகள் இனி உங்களைப் பாதுகாக்காதபோது, நீங்கள் உங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

ஆனால் இது எங்கு செல்கிறது என்பது குறித்து நாம் தெளிவாக இருக்க வேண்டும். கோட்டைகளின் உலகம் ஏழ்மையானதாகவும், உடையக்கூடியதாகவும், குறைந்த நிலையானதாகவும் இருக்கும்.

மேலும் மற்றொரு உண்மை உள்ளது: பெரும் சக்திகள் தங்கள் அதிகாரத்தையும் நலன்களையும் தடையின்றிப் பின்தொடர்வதற்காக விதிகள் மற்றும் மதிப்புக ளின் பாசாங்குகளைக் கூட கைவிட்டால், "பரிவர்த்தனைவாதத்திலிருந்து" கிடைக்கும் ஆதாயங்களை நகலெடுப்பது கடினமாகிவிடும். மேலாதிக்கத்தால் தொடர்ந்து தங்கள் உறவுகளைப் பணமாக்க முடியாது.

நிச்சயமற்ற தன்மைக்கு எதிராககாப்பீட்டை வாங்கவும், விருப்பங்களை அதிகரிக்கவும்,தங்களை பாதுகாக்கவும் கூட்டாளிகள் பன்முகப்படுத்துவார்கள். இது இறையாண்மையை மீண்டும் கட்டியெழுப்புகிறது - ஒரு காலத்தில் விதிகளில் அடித்தளமாக இருந்த இறையாண்மை, தற்போது அழுத் தத்தைத் தாங்கும் முறையில் கீழ்சென்றுள்ளது.

நான் சொன்னது போல், அத்தகைய உன்னதமான இடர் மேலாண்மை ஒரு விலையில் இருக்கின்றது, அது மூலோபாய சுயாட்சியின் விலை, இறையாண்மையையும் அதில்பகிர்ந்து கொள்ளலாம். மீள்தன்மையில் கூட்டு முதலீடுகள் அனைவரும் தங்கள் சொந்த கோட்டையை கட்டுவதை விட மலிவானவை. பகிரப்பட்ட தரநிலைகள் துண்டு துண்டாக இருப்பதைக் குறைக்கின்றன. நிரப்புத் தன்மைகள் நேர்மறையான தொகை.


கனடா போன்ற நடுத்தர சக்திகளுக்கான கேள்வி, இந்த புதிய யதார்த்தத்திற்கு ஏற்ப மாற்றப்படுகிறதா என்பது அல்ல. நாம் உயர்ந்த சுவர்களைக் கட்டுவதன் மூலம் நாம் மாற்றியமைக்கிறோமா - அல்லது இன்னும் லட்சியமான ஒன்றைச் செய்ய முடியுமா என்பதுதான் கேள்வி.

விழிப்புணர்வை முதலில் கேட்டவர்களில் கனடாவும் ஒன்று, இது நமது மூலோபாய தோரணையை அடிப்படையில் மாற்ற வழிவகுத்தது.

நமது புவியியல் மற்றும் கூட்டணி உறுப்பினர்கள் தானாகவே செழிப்பையும் பாதுகாப்பையும் வழங்குகிறார்கள் என்ற நமது பழைய, வசதியான அனுமானம் இனி செல்லுபடியாகாது என்பதை கனடியர்கள் அறிவார்கள்.

**தொடரும்......**




## அமெரிக்காவும் சோவியத் ... தொடர்ச்சி...

மாநாட்டில் தனது உரையில் இதை தெரிவித்தார், ஆனால் ஐரோப்பா அதை ஒரு கெட்ட கனவாக மறக்கத் தலைப்பட்டிருந்தது.

ஆனாலும் வெனிசுலா மற்றும் ஈரான் போன்றவற்றில் போரையும் தொடர ட்றம்ப விரும்புகின்றார். போரை வெறுப்பதாக கூறும் ட்றம் ஏன் இதைச் செய்கின்றார் என்ற குழப்பமும் உண்டு. அதாவது டிரம்ப் பழைய அமைப்பை அகற்ற முயற்சிக்கவில்லை; அவர் ஒரு புதிய ஒன்றை உருவாக்க வேலை செய்கிறார். அதாவது ஒரு வெளிப்படையான மட்டுப்படுத்தப்பட்ட காலனித்துவ மாதிரியான அமைப்பு.

பைடனின் கீழ் இருந்ததைப் போலவே விஷயங்கள் திரும்பும் என்ற நம்பிக்கையில் ஐரோப்பா தற்போதைய நிகழ்வகளைத் தள்ளி வைக்க முயற்சிக்கலாம். ஆனால் அது மிகவும் சாத்தியமில்லை. அமெரிக்காவில் ஒரு எதிர் புரட்சி ஏற்பட்டு, உலகமயமாக்கப்பட்ட ஜனநாயகக் கட்சியினர் மீண்டும் அதிகாரத்தை அடைந்தாலும், அவர்கள் முற்றிலும் மாறுபட்ட சர்வதேச ஒழுங்கை எதிர்கொண்டு அதற்கேற்ப செயல்படுவார்கள்.

இதெல்லாம் அமெரிக்காவிற்கு நல்லதா என்பதே தற்போதைய கேள்வி? அநேகமாக இல்லை. ட்ரம்பைப் போலவே, சோவியத் ஒன்றியத் தலைவர் மிகைல் கோர்பச்சேவ் 1980 களில் காரணமின்றி ஆழமான சீர்திருத்தங்களை ("பெரெஸ்ட்ரோயிகா" என்று அழைக்கப்படுகிறார்) தொடங்கினார்; நாடு பேரழிவை நோக்கிச் செல்வதை அவர் உணர்ந்தார். ட்ரம்பைப் போலவே, கோர்பச்சேவும் உயரடுக்கின் சில பகுதிகளிடமிருந்து ஆதரவைப் பெற்றார், மேலும் ட்ரம்பைப் போலவே, உள் எதிர்ப்பை அடக்குவதற்கு அவர் மிகவும் தீவிரமான முறைகளை நாட வேண்டியிருந்தது.

கோர்பச்சேவின் சீர்திருத்தங்கள் சோவியத் ஒன்றியத்திற்கு ஒரு பேரழிவாக முடிந்தது; சிகிச்சை நோயை விட மோசமாக மாறியது. அமெரிக்காவும் இதேபோன்ற விதியை எதிர்கொள்ளுமா? காலம் பதில் சொல்லும்.

## மில்லர், கயலின் ... தொடர்ச்சி...

மனு கொடுத்து மனு கொடுத்தே தேய்ந்து போய்விட்ட தமிழினத்தை, முத்துக்குமார் எள்ளி நகையாடினான். நாம் மகஜர் கொடுக்கும் இனமாக மாறி விடலாகாது - என்று தெள்ளத் தெளிவாகக் கூறினான். முத்துக்குமார் என்கிற அந்த நெருப்புக் கனலின் கூற்றை, அவரது நினைவு நாளான ஜனவரி 29-ம் தேதியில் நினைவு கூர்வதோடு நின்றுவிடக் கூடாது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு களத்திலும் சமரசமில்லாமல் அதைக் கடைப்பிடிப்பதுதான். இன்றைய முதல் முக்கியத் தேவை.

2009 ஜனவரி 31-ந் தேதி நள்ளிரவில், மூன்று நாட்களுக்கு முன் தீப்பிழம்புகளுக்கு தன்னை இரையாக்கிக் கொண்ட முத்துக்குமாரை முழுமையாக நெருப்பிடம் ஒப்படைத்த கணத்தில். அந்த இறுதி நிகழ்ச்சிக்குப் பொறுப்பேற்றிருந்த சகோதரர் வெள்ளையன் சொன்ன வார்த்தைகளை மறக்கவே முடியாது.

இறுதி நிகழ்வு நடந்த மூலக்கொத்தளம் பகுதி முழுக்க. முத்துக்குமாரை எரித்த சுடலையின் வெண்புகை பரவத் தொடங்கியது. 'நாம் இப்போது முத்துக்குமாரை சுவாசித்துக் கொண்டிருக்கிறோம்' என்றார் வெள்ளையன். அப்போது மட்டுமல்ல. இப்போதும் அதுதான் உண்மை. நாம் முத்துக்குமாரை வாசிப்பதோடு நின்றுவிடவில்லை. வீரத்தமிழ் மகன் முத்துக்குமாரை சுவாசிக்கிறோம். அந்த சுவாசம். ஈழத்தாய் மண் தன் விடுதலையை சுவாசிக்க நிச்சயமாக வழிவகுக்கும். இந்த நம்பிக்கையோடு இலக்குகளைத் தீர்மானிப்போம். இனப்படுகொலைக்கு நீதியையும். தமிழ் ஈழ விடுதலையையும் அடைவதற்கான ஆயத்தப் பணிகளை. முன்னெப்போதையும் காட்டிலும் பல மடங்கு தீவிரப்படுத்துவோம். முத்துக்குமார்களின் லட்சியத்தை, ஒன்றுவிடாமல் நிறைவேற்றுவோம்.

## பயங்கரவாத எதிர்ப்பு... தொடர்ச்சி...

**கேள்வி :**

**முடிவாக நீங்கள் சொல்ல விரும்புவது என்ன?**

**பதில் :**

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் அரசியல் ரீதியாக தமிழ் மக்களை இலக்காகக் கொண்ட ஒரு சட்டமாகவேபார்க்கப்படுகிறது. இதனை எதிர்கொள்ள தமிழர்கள் அரசியல், சமூக மற்றும் சர்வதேச அளவில் ஒருங்கிணைந்த போராட் டத்தைமுன்னெடுக்க வேண்டும்.

தமிழ் அரசியல் சக்திகள் ஒன்றிணைந்து மக்களிடையே நம்பிக்கையை உருவாக்க வேண்டும். தாயகத்தில் அரசியல் எழுச்சி உருவாகும்போதுதான் வெளிநாட்டு ஆதரவும் பயனளிக்கும். அதுவே தமிழ் அரசியலின் எதிர்காலத்திற்கு மிக முக்கியமான பாதையாகும்.

• • •

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு .
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை .



# தாயகமும் வாழ்வும்







